விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 26 வியாழக்கிழமை (09.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 141

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

பிரபாகரனுக்கு பிறந்தநாள் கொண்டாட்டம்

## சிவாஜிலிங்கத்துக்கு எதிராக பயங்கரவாத சட்டத்தில் வழக்கு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளில் கேக் வெட்டி கொண்டாடியமை மற்றும் விடுதலைப் புலிகளின் புகைப்படங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்திற்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான அழைப்பாணையை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் வீதியால் சென்று கொண்டிருந்த சிவாஜிலிங்கத்தை வழிமறித்து பொலிஸார் வழங்கியுள்ளனர்.

அவருடன், வல்வெட் 23

## கொடிய பயங்கரவாதத்துக்கு இலங்கையில் இடமளிக்க முடியாது

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன



(கொழும்பு)

பயங்கரவாதம் உலகில் எங்குமே வெற்றி பெற்றதில்லை என்றும் அடிப்படைவாத பயங்கரவாதத்தின் மிலேச்சத்தனமான நோக்கங்களுக்கு இலங்கையரிடையே பிரிவினையை ஏற்படுத்துவதற்கு இடமளிக்க கூடாதென்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

நேற்று முற்பகல் கல்முனை சாய்ந்தமருது பிரதேசத்திற்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டு கிழக்கு மாகாண 24

# சிறைக்காவலில் உள்ள தமிழ் கைதிகளை விரைவில் விடுவிக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம்

பாராளுமன்றில் பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு) ஆயுத மோதலில் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு சிறைக்காவலில் உள்ள தமிழ் கைதிகளை விரைவில் புனர்வாழ்வுக்குட்படுத்தி அவர்களை விடுவிக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கிறது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின் போது, வடக்கில் உள்ள கூட்டுறவு பயிற்சி நிலையத்தை புனர்வாழ்வு நிலையமாக இராணுவம் பயன்படுத்தி வருகின்றது.

ஆனால் இன்று ஒரு போராளி மட்டுமே அதில் உள்ளார். அவ்வாறு இருக்கையில் இந்த நிலையத்தை இராணுவம் அபகரிக்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆகவே இந்த கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினை விடுவித்து மக்கள் மயப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தேசிய கூட்டமைப் 24

## கிணற்றில் விழுந்த 2 வயது சிறுவன் உயிரிழப்பு

மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

வீட்டினுள் விளையாடிக் கொண்டிருந்த இரட்டைப் பிள்ளைகளில் ஒருவர் கிணற்றுக்குள் 24

விடுதலைப் புலிகளின்

## ஆவணங்கள் தேடி அகழ்வு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட முறிகண்டி வாறு வடக்கு பகுதியில் தனிநபர் ஒருவரின் காணிக்குள் நேற்று 24

எதிர்வரும் 13ம் திகதி

## மீண்டும் குண்டு வெடிக்கும் ஆபத்து

பொன்சேகா எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் 13ம் திகதி வெள்ளவத்தை, நாவல, பஞ்சிகாவத்த போன்ற பகுதிகளில் 23

சட்டமா அதிபரின் அறிக்கை கிடைக்காததால்

## பல்கலை மாணவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்) கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை நடத்துநர் தொடர்பான வழக்கில் பிணை வழங்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றிற்கு இல்லையென யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எஸ்.பீற்றர் போல் தெரிவித்துள்ளார். 03

## புதிய பயங்கரவாத தடைச்சட்டம் மனித உரிமைகளை பாதிக்கும்

பாராளுமன்றில் ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டால் மக்களின் மனித உரிமைகள் வெகுவாக பாதிப்படையும் என்று ஜே.வி.பி.யின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சட்டத்தின் ஊடாக போராட்டங்களைக் கட்டுப்படுத்தும் சரத்துக்கள் உள்ளன. இதற்கான அதிகாரங்கள் அரசாங்கத்திடம் உள்ளன.

இந்த சட்டத்தின் ஊடாக அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை நினைக்க மட்டும்தான் முடியுமே தவிர, அதன்ன 23

யாழ் நகரில் அமைந்துள்ள

## அனைத்து பள்ளிவாசல்களிலும் ஒரே நேரத்தில் தேடுதல்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களும் நேற்று ஒரே நேரத்தில் சோதனையிடப்பட்டன. எனினும் அங்கிருந்து எவ்வித பொருட்களுமோ சந்தேக 24

ஐ.எஸ் பயங்கரவாதிகளின்

## ஆயுத களஞ்சியம் ஒன்று மாவனெல்லையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மாவனெல்லையில் ஐ.எஸ் பயங்கரவாதிகளின் ஆயுத களஞ்சியசாலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஹிங்குல பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன் 24

## ஹெரோயின் கடத்தியவருக்கு மரணதண்டனை

கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பு, ஆட்டுப் 24

## வடக்கு பாடசாலைகளில் 60 வீத மாணவர் வரவு

கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணப் பாடசாலைகளில் நேற்றைய தினம் புதன்கிழமை மாணவர் வரவு 60 வீதத்தை எட்டியதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண பாடசாலைகளின் இரண்டாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் கடந்த 6ம் திகதி திங்கட்கிழமை 24

# கசிப்புடன் கைதான பெண்ணுக்கு 6 மாத சிறைத் தண்டனை

## சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவு

(கரணவாய்)

கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண் ஒருவருக்கு ஆறுமாத சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஜே.கஜநிதிபாலன்.

கடந்த மூன்றாம் மாதம் கொடிகாமம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த பெண்ணை சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் 400 மில்லி லீட்டர் கசிப்புடன் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தி இருந்தனர்.

அவர் மீதான வழக்கு நேற்று புதன்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவர் ஏற்கனவே 2016 ஆம் ஆண்டு இதே குற்றத்திற்காக ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது என்பதை மதுவரி நிலையத்தினர் மன்றின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து ஆறுமாத சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார் சாவகச்சேரி நீதவான். (ம-60)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

## மஹோற்சவம்

(கொடிகாமம்)

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய மஹோற்சவ பெருவிழா இன்று வியாழக் கிழமை முற்பகல்10.30மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள்நடைபெறும்.

தொடர்ந்து 16.05.2019 வியாழக்கிழமை வேட்டைத்திருவிழாவும் மாலை சப்பறத் திருவிழாவும் 17.05.2019 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 18.05.2019 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 19.5.2019 ஞாயிற்றுக்கிழமை வைரவசாந்தியும் நடைபெறும். (ம-114)


## துயர்பகிர்கின்றோம்



திருமதி
சுந்தரலிங்கம் கமலாதேவி

எமது கல்லூரியின் நடனபாட சிரேஸ்ட ஆசிரியர் திருமதி த.விஜயகுமாரன் அவர்களின் அன்புத் தாயார் சுந்தரலிங்கம் கமலாதேவி அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு: 15.02.1949
இறப்பு: 06.05.2019

ஆசிரியர்கழகம்
யா/யூனியன்கல்லூரி, தெல்லிப்பளை.

(C-6327)



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

#### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் போட்டோ பிரதி சேவையை மேற்கொள்வதற்கான கேள்விப் பத்திரம் கோரல்

யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் போட்டோ பிரதி சேவையை ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நடாத்துவதற்கு பொருத்தமான தனி நபர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பல்கலைக்கழக நூலகத்தில் மாணவர்களின் தினசரி விரிவுரைக் குறிப்புகள், பல்கலைக்கழக நூலகத்திலுள்ள நிரந்தர உசாத்துணை நூல்கள் என்பவற்றை நிழற்பிரதி செய்வதற்கு இச்சேவையைப் பொறுப்பேற்பவர் தயாராக இருக்க வேண்டும்.

இச்சேவையைப் பொறுப்பேற்பவர் மாதவாடகையாக ரூபா 1,000/- இனை மாதாந்தம் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்துவதுடன் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

விரும்பிய விண்ணப்பதாரர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= இனை பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் அல்லது நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயரில் யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கியின் கணக்கிலக்கம் **162-1-001-6-0000880** இற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் செலுத்திபெற்ற பற்றுச் சீட்டை 23.05.2019 மதியம் 12.00 மணிக்கு முன்னர் பிரதிப்பதிவாளர், நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை 24.05.2019 பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில், தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் பத்திரங்களை இடலாம். கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் "பல்கலைக்கழக நூலகத்தில் போட்டோ பிரதி சேவை வழங்கல்" என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். கேள்விப்பத்திர விபரம் மற்றும் நிபந்தனை விபரங்களை பொது நிர்வாகக் கிளையில் பிரதிப்பதிவாளரிடம் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

கேள்விப்பத்திரங்கள் 24.05.2019 பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடத்திற்கு சமுகமளிக்கலாம்.

**பதிவாளர்** (C-6329)



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### வாடகைக்கு வீடுகள் / கட்டடங்கள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு விடுதி வசதி வழங்குவதற்காக பின்வரும் வேண்டுதல்களை நிறைவு செய்யக்கூடிய பெரிய, நடுத்தர வீடுகள் / கட்டடங்கள் யாழ் பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் வாடகைக்கு தேவை.

1. விருந்தினர் விடுதிக்கான வீடு / கட்டடம்

| அறைகள் | குளியல் அறைகள் | வேண்டப்படும் தகைமைகள் |
|---|---|---|
| 10 – 15 இருத்தல் வேண்டும் | இணைந்த குளியல் அறைகள் (15) விரும்பத்தக்கது<br>அல்லது<br>குறைந்தது இணைந்த குளியல் அறைகள் 05 உம் பொதுவான குளியல் அறைகள் 03 உம் உடையதாக இருத்தல் வேண்டும். | • எல்லா அறைகளும் குளிரூட்டப்பட்டதாக இருத்தல் விரும்பத்தக்கது.<br>• முழுமையாக மாபிள் பதித்த வீடாக இருத்தல் வேண்டும்.<br>• புதிதாக வர்ணம் பூசப்பட்டு அழகாக இருத்தல் வேண்டும்.<br>• வாகன தரிப்பிட வசதி போதுமானதாக இருத்தல் வேண்டும்.<br>• பல்கனி வசதி உடையதாக இருத்தல் விரும்பத்தக்கது.<br>• சாரதிகளுக்கான ஓய்வறை உடையதாக இருத்தல் வேண்டும்.<br>• விருந்தினர் விடுதி பாதுகாவலருக்கான ஓய்வறை உடையதாக இருத்தல் வேண்டும். |

2. அலுவலர் விடுதிக்கான வீடு / கட்டடம்

| அறைகள் | குளியல் அறைகள் | வேண்டப்படும் தகைமைகள் |
|---|---|---|
| குறைந்தது 05 அறைகளாவது இருத்தல் வேண்டும் | இணைந்த குளியல் அறைகள் விரும்பத்தக்கது<br>அல்லது<br>குறைந்தது இணைந்த குளியல் அறைகள் 03 உம் பொதுவான குளியல் அறைகள் 02 உம் உடையதாக இருத்தல் வேண்டும். | • வீடு வர்ணம் பூசப்பட்டு அழகாக இருத்தல் வேண்டும்.<br>• அறைகள் காற்றோட்டமுள்ளதாக இருத்தல் வேண்டும்.<br>• காணி ஓரளவு விசாலமானதாக இருத்தல் வேண்டும். |

வீட்டை / கட்டடத்தை வாடகைக்குத்தர விரும்புவோர் கீழ்வரும் மாதிரிப்படிவத்தில் தயார் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 22.05.2019 ஆம் திகதி பி.ப 2:30 மணிக்கு முன்னர் பிரதிப் பதிவாளர் / பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் "யாழ். பல்கலைக்கழக விருந்தினர்களுக்கான வீடு அல்லது அலுவலர்களுக்கான வீடு" என தனித்தனியாக குறிப்பிடப்பட வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

* தொடர்புகளுக்கான தொலைபேசி இல: 021 222 6517

**பதிவாளர்**

- - - - - - - - - - - - - - - - - - - -

பிரதிப் பதிவாளர் / பொது நிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்.

**யாழ். பல்கலைக்கழகத்தின் விருந்தினர் / அலுவலர்களின் உபயோகங்களிற்கான வீடு/கட்டடம்**

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் ......... ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை / கட்டடத்தை பல்கலைக்கழகத்திற்கு வாடகைக்குத் தர விரும்புகின்றேன்.

**வீடு / கட்டடம் பற்றிய விபரங்கள்**

1) வீடு அமைந்திருக்கும் இடம் ..........................................
2) வீட்டு சொந்தக்காரரின் பெயரும் அவரது நிரந்தர முகவரியும் ..........................
3) தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கமும்

பெயர்: ..........................................
முகவரி: ..........................................
தொலைபேசி இல: ..........................................

4) (a) வீட்டின் பரப்பளவு (சதுர அடி) ..........................................
(b) வீடு அமைந்துள்ள காணியின் பரப்பளவு ..........................................

5) அறைகளின் எண்ணிக்கை :

| விபரம் | AC உடன் | AC அற்றது |
|---|---|---|
| இணைந்த குளியல் அறைகளுடன் அறைகளின் எண்ணிக்கை | | |
| இணைந்த குளியல் அறைகள் அற்ற அறைகளின் எண்ணிக்கை | | |

6) மலசல கூடங்களின் எண்ணிக்கை ..........................................
7) மின்சார வசதி உண்டு / இல்லை ..........................................
விபரம் ..........................................
8) தண்ணீர் வசதி : கிணறு / குழாய் நீர்
விபரம் ..........................................
9) எதிர்பார்க்கும் குத்தகை / மாதாந்த வாடகை ..........................................
10) குத்தகைக்கு தரக்கூடிய கால அளவு ..........................................
11) வேறு யாதாயினும் கட்டுப்பாடுகள் / நிபந்தனைகள் (இருப்பின்) ..........................

.......................... ..........................................
திகதி (C-6328) விண்ணப்பதாரரின் கையொப்பம்

# சிங்களமும் தமிழும் பிரதான மொழிகள்

## வேறு மொழியிருப்பது கேலிக்குரியது- ரவி



(கொழும்பு)

சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கு மேலதிகமாக வேறு மொழி நாட்டிற்குள் இருக்குமாயின் அது கேலிக்குரியது எனவும், அந்தக் கேலியை நிறுத்த வேண்டும் எனவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஸ்ரீடி உபபோலவில் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல வருடங்களாக நடைபெற்ற பெரிய போரை முடிவுக்கு கொண்டு வந்த திறமையான படைத்தளபதியான சரத் பொன்சேகாவின் திறமையை நாட்டின் பாதுகாப்பு தொடர்பான விடயத்தில் மீண்டும் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சியினரான நாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இதற்கு இன்னும் ஜனாதிபதியிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை. நாட்டின் அனைத்து இடங்களிலும் அமைதி நிலவ வேண்டும். எவரும் அச்சத்துடன் வாழக் கூடாது.

நாட்டில் வாழும் அனைவருக்கும் நாட்டின் சகல இடங்களிலும் வாழ உரிமை உள்ளது. இதற்கான பாதுகாப்பை வழங்குவது என்பது அரசாங்கம் என்ற வகையில் எமது கடமை.

அதேபோல் நாம் அனைவரும் நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். நாட்டின் தேசிய பாதுகாப்பை தற்காத்துக் கொள்ள வேண்டும்.

நாட்டில் இரண்டு பிரதான மொழிகளே இருக்கின்றன. அது சிங்களமும், தமிழும். ஆங்கிலத்தை நாங்கள் தொடர்பு மொழியாக பயன்படுத்துகின்றோம்.

இந்த இரண்டு மொழிகளை விடுத்து நாட்டில் பல இடங்களில் பல மொழிகள் இருப்பதாக அறியக் கிடைத்துள்ளன.

இந்த நிலைமை கேலிக்குரியது. அந்தக் கேலியை நிறுத்த வேண்டும் எனவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# 48 வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

விசா இன்றி இலங்கையில் தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் 48 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, விசா காலம் நிறைவடைந்த பின்னரும் நாட்டில் தங்கியிருந்த 108 பேர் கடந்த சில தினங்களில் கைது செய்யப்பட்டதாகவும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கயான் மிலிந்த தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் நாட்டில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது விசா இன்றி நாட்டில் தங்கியிருந்த 13 பேர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களில் 8 பேர் பாகிஸ்தான் பிரஜைகளாவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நேற்று கொழும்பிலுள்ள ஹோட்டலொன்றில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் விசா இன்றி நாட்டில் தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டதாக கயான் மிலிந்த தெரிவித்தார்.

தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள வெளிநாட்டவர்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### தாக்குதலைத் தடுக்கத்தவறிய

# பொலிஸ்மா அதிபர் பூஜிதவுக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலை தடுக்கத்தவறியது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை ஆராய்ந்த பின்னரே உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.



இதற்கமைய எதிர்வரும் 21 ஆம் திகதி இருவரையும் உயர் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

### யாழ்.பல்கலைக்கழக

# மாணவர் கைது குறித்து சட்டமா அதிபர் மௌனம்

## விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

கைது செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை நடத்துநர் தொடர்பான வழக்கில் பிணை வழங்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றிற்கு இல்லையென யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எஸ். பீற்றர் போல் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை ஊழியர் தொடர்பான வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிக்கை கிடைக்கப்பெறாததால் பிணை வழங்கும் அதிகாரம் தனக்கு இல்லையெனத் தெரிவித்த நீதவான் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி காலை யாழ்.பல்கலைக்கழகத்தில் சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் படத்தையும் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட பொதுமக்களின் படத்தையும் தம்வசம் வைத்திருந்ததாகத் தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், செயலாளர் மற்றும் சிற்றுண்டிச்சாலைநடத்துநர் ஆகிய மூவரையும் கைது செய்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நிலையில் யாழ். நீதவான் நீதிமன்ற நீதவானின் வாசஸ்தலத்தில் கோப்பாய் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் மாணவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கடந்த 6 ஆம் திகதி மன்றில் நகல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து குறித்த வழக்கு அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையில் மாணவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் முன்வைக்கப்பட்ட வாதப் பிரதிவாதங்களைக் கேட்டறிந்த நீதவான் நேற்று 8 ஆம் திகதி குறித்த வழக்குடன் தொடர்புடைய மாணவர்களுக்கு பிணை வழங்குவதா? அல்லது வழக்கில் இருந்து விடுவிப்பதா? என மன்று முடிவு செய்யும் எனத் தெரிவித்த நிலையில் நேற்று புதன்கிழமை வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபரின் அறிக்கை கிடைக்கப் பெறாததால் மன்றுக்குரிய அதிகார எல்லைக்குட்பட்டு பிணை வழங்க முடியாதெனத் தெரிவித்து எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு குறித்த வழக்கை ஒத்திவைத்தார். (இ-10-101)

# தேர்தலுக்கான அவசியம் என்ன?

### வெல்கம கேள்வி



(கொழும்பு)

நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்த குண்டுத்தாக்குதல்களால் ஏற்பட்ட துயரத்திலிருந்து மக்கள் இன்னும் மீளவில்லை. இவ்வாறான நிலைமையில் தேர்தலுக்கு செல்ல வேண்டிய தேவை என்ன என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கேள்வியெழுப்பினார்.

நாட்டின் தற்போதைய நிலவரம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது தேர்தலை நடத்துவதற்கான தேவை தான் என்ன? ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்களே காணப்படுகின்றன. இந்த ஆறு மாத காலத்திற்குள் அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைக்கான தீர்வினைக் கண்டதன் பின்னர் தாராளமாக தேர்தலுக்குச் செல்ல முடியும்.

நாட்டிலுள்ள மூத்த அரசியல் தலைவர்கள் ஓய்வு பெற வேண்டிய நேரம் வந்துள்ளது. நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்த குண்டுத் தாக்குதல்களால் ஏற்பட்ட துயரத்திலிருந்து மக்கள் இன்னும் மீண்டு வரவில்லை. இது போன்றதொரு சந்தர்ப்பத்தில் தேர்தலைப்பற்றி பேசிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறானவர்கள் பாராளுமன்றத்தில் இருப்பதனாலேயே இது போன்றதொரு பாரிய அழிவுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பில் பிரதான பள்ளிவாசல் கிணற்றிலிருந்து வாள்கள் மீட்பு

### பொலிஸார் தகவல்

(மாளிகாவத்தை)

கொழும்பு, மாளிகாவத்தையிலுள்ள பிரபல பள்ளிவாசல் வளாகத்தில் நேற்று வாள்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுகததாஸ விளையாட்டு மைதானத்திற்கு அருகிலுள்ள பள்ளிவாசலில் இந்த வாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

பள்ளிவாசல் வளாகத்திலுள்ள கிணறு ஒன்றிலிருந்து இந்த வாள்கள் மற்றும் உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். உரப்பை ஒன்றில் கட்டப்பட்ட நிலையில் வாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த கிணற்றில் மேலும் பல பொருட்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இராணுவச் சீருடைகளை ஒத்த ஆயிரத்து 116 ஆடைகள் மீட்பு

### லொறிச் சாரதி கைது

(சீதுவ)

சீதுவ பொலிஸார் மற்றும் விமானப்படையினர் இணைந்து முதுவாடிய பிரதேசத்தில் நேற்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது, வலப்பனையிலிருந்து சீதுவ நோக்கிப் பயணம்செய்த லொறியொன்றை வழிமறித்து சோதனையிட்ட போது, அதற்குள்ளிருந்து ஆயிரத்து 116 இராணுவச் சீருடைகளை ஒத்த ஆடைகள் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஆடைகளுடன் லொறிச் சாரதி கைது செய்யப் பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# ட்ரோன் கருவிகள் சுட்டு வீழ்த்தப்படும்

### விமானப்படை எச்சரிக்கை

(கொழும்பு)

தடையை மீறிப் பறக்கும் விமானியில்லா விமானங்கள், ட்ரோன் கருவிகள் சுட்டு வீழ்த்தப்படும் என்று விமானப்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் கிகான் செனிவிரத்ன எச்சரித்துள்ளார்.

இலங்கை வான் பரப்பில், விமானியில்லா விமானங்கள், ட்ரோன் கருவிகள் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ட்ரோன் கருவிகள் பறக்க விடப்படுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இதனை யாரும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந் நிலையிலும், அண்மைய நாட்களில் கொழும்பு நாரஹேன்பிட்டிய பகுதியிலும் காங்கேசன்துறை பகுதியிலும் ட்ரோன் கருவிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

அவற்றின் மீது படையினரும் பொலிஸாரும் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர்

எனினும் அவை தப்பிச் சென்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




# துள்ளி எழுந்தது டில்லி

## வெளியேறியது ஹைதராபாத்

ஐ.பி.எல்., தொடரின் 'எலிமினேட்டர்' போட்டியில் டில்லி அணி 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் மிரட்டிய பிரித்வி, ரிஷாப் பன்ட் அரைச்சதம் விளாசி அசத்தினர். ஹைதராபாத் அணி தொடரில் இருந்து வெளியேறியது.

இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல்., தொடரின் 12வது சீசன் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. நேற்று விசாகப்பட்டனத்தில் 'எலிமினேட்டர்' போட்டி நடந்தது.

இதில் புள்ளிப்பட்டியலில் 3, 4வது இடங்களைப் பிடித்த டில்லி, ஹைதராபாத் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**கப்டில் விளாசல்**

ஹைதராபாத் அணிக்கு சகா, கப்டில் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. போல்ட் வீசிய முதல் ஓவரின் கடைசி பந்தை பவுண்டரிக்கு விரட்டிய சகா (6), இஷாந்த் 'வேகத்தில்' சரிந்தார். மறுபக்கம் வேகமாக ஓட்டங்கள் சேர்த்தார் கப்டில். இஷாந்த் பந்தை சிக்சருக்கு அனுப்பிய கப்டில், போல்ட் ஓவரில் அடுத்தடுத்து இரு சிக்சர்கள் அடித்தார். தொடர்ந்து அக்சர் பந்திலும் சிக்சர் விளாசினார் கப்டில்.

இவருக்கு கைகொடுத்த மணிஷ் பாண்டே, இஷாந்த் ஓவரில் இரு பவுண்டரி அடிக்க, ஹைதராபாத் அணி 6 ஓவர்களில் 54/1 ஓட்டங்கள் குவித்தது.

இதன்பின் டில்லி அணித் தலைவர் ஸ்ரேயாஸ், அமித் மிஸ்ராவை அழைக்க, இதற்கு நல்ல பலன் கிடைத்தது. இவரது 3வது பந்தில் கப்டில் (36) சிக்கினார். அடுத்து அணித் தலைவர் வில்லியம்சன், மணிஷ் பாண்டே இணைந்து நிதான ஓட்டக் குவிப்பை வெளிப்படுத்த, ஓட்டஎண்ணிக்கை சீராக உயர்ந்தது. இந்நிலையில் மணிஷ் பாண்டே, 30 ஓட்டங்களுடன் 'பெவிலியன்' திரும்பினார்.

**கீமோ அபாரம்**

5 ஓட்டங்கள் எடுத்த போது ரிஷாப் பன்ட் தயவில் தப்பிப் பிழைத்த வில்லியம்சன், ரூதர போர்ட் பந்தில் பவுண்டரி அடித்து மிரட்டினார். இவர் 28 ஓட்டங்களுடன் இஷாந்த் பந்தில் போல்டானார். கடைசி நேரத்தில் தமிழகத்தின் விஜய் சங்கர், வேகமாக ஓட்டங்கள் சேர்த்தார். அக்சர் பந்தில் சிக்சர், கீமோ பந்தில் பவுண்டரி அடித்தார். போல்ட் ஓவரில் அடுத்தடுத்து பவுண்டரி, சிக்சர் என விளாசிய சங்கர், 11 பந்துகளில் 25 ஓட்டங்கள் எடுத்து சற்று கைகொடுத்தார்.

மொஹமட் நபி 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஹூடா (4), ரஷிட் கான் (0) கைவிட, ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்கள் எடுத்தது.

பந்துவீச்சில் டில்லி அணி சார்பில் கீமோபோல் அதிகபட்சமாக 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அடுத்து களமிறங்கிய டில்லி அணி 2.5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 24 ஓட்டங்களை எடுத்திருந்தது.

**பிரித்வி அரைசதம்**

அடுத்து களமிறங்கிய டில்லி அணிக்கு ஷிகர் தவான், பிரித்வி ஷா ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்கு 7.3 ஓவரில் 66 ஓட்டங்கள் சேர்த்த போது, தவான் (17) ஆட்டமிழந்தார். ஸ்ரேயாஸ் (8) ஏமாற்ற, பிரித்வி 56 ஓட்டங்கள் எடுத்து கைகொடுத்தார். ரஷிட் கான் வீசிய போட்டியின் 15வது ஓவரில் மன்ரோ (14), அக்சர் படேல் (0) அவுட்டாக, போட்டி ஹைதராபாத்துக்கு சாதகமாக மாறியது.

கடைசி 18 பந்துகளில் 34 ஓட்டங்கள் தேவைப்பட்டன. பசில் தம்பி வீசிய 18 வது ஓவரில் ரிஷாப் பன்ட் அடுத்தடுத்து தலா 2 சிக்சர், பவுண்டரிகள் என 22 ஓட்டங்கள் விளாச, மீண்டும் டில்லி பக்கம் வெற்றி திரும்பியது. புவனேஷ்வர் பந்தில் சிக்சர் அடித்து வெற்றியை உறுதி செய்த ரிஷாப் பன்ட், 49 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

கடைசி ஓவரில் 5 ஓட்டங்கள் தேவைப்பட்டன. முதல் 3 பந்துகளில் 3 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. 4வது பந்தில் அமித் மிஸ்ரா (0) ரன் அவுட்டானார். 5வது பந்தில் கீமோ ஒரு பவுண்டரி அடிக்க, டில்லி 19.5 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.



அரைச்சதம் விளாசிய டில்லியின் பிரித்வி ஷா

**மிஸ்ரா 'அவுட்' ஏன்**

துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டம் எடுக்க ஓடும் போது, எதிரணி வீரர்கள் ரன் அவுட் செய்ய முயற்சிப்பர். இதை தடுக்கும் வகையில் வேண்டும் என்றே துடுப்பாட்டக்காரர்கள் ஓடக் கூடாது. இது 'ரீப்ளேயில்' உறுதி செய்யப்பட்டால், பீல்டிங்கிற்கு தொல்லை கொடுத்தார் என்ற புதிய விதியின் (2017) அடிப்படையில் அவுட் கொடுக்கப்படும். இப்படித்தான் நேற்று அமித் மிஸ்ராவுக்கு அவுட் கொடுக்கப்பட்டது.

**முதல் வெற்றி**

ஐ.பி.எல்., தொடரில் 'நொக் அவுட்' என்றாலே டில்லிக்கு அலர்ஜிதான். 2008ல் ராஜஸ்தான் (அரையிறுதி), 2009ல் டெக்கான் (அரையிறுதி), 2012ல் கொல்கத்தா (தகுதிச்சுற்று 1), சென்னையிடம் (தகுதிச்சுற்று 2) வீழ்ந்தது. நேற்று முதன் முறையாக வெற்றி (எலிமினேட்டர்) பெற்றது.

# கரைசேர்ப்பாரா தோனி?

## தகுதிச்சுற்று 2இல் எதிர்பார்ப்பு




**'இரண்டு' ராசியா**

பிரிமியர் தொடரின், கடந்த 11 சீசனில் புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் இருந்த அணிகள் 6 முறை கிண்ணம் வென்றன. 1, 3 வது இடத்தில் இருந்த அணிகள் இரு முறை சாதித்தன. 2009ல் 4வது இடத்தில் இருந்த டெக்கான் கிண்ணம் வென்றது. இந்த சீசனில் புள்ளிப் பட்டியலில் 2ஆவது இடத்தில் இருந்த, சென்னை, சாதிக்குமா என பொறுத்திருந்து காண்போம்.

ஐ.பி.எல்., தொடரில் தகுதிச்சுற்று 1ல் தோல்வியடைந்த சென்னை அணி, 2012, 2015 சீசனைப் போல மீண்டு வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் எழுந்துள்ளது.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 12வது சீசன் தற்போது நடக்கிறது. இதன் 'பிளே ஓப்' போட்டிகள் தற்போது நடக்கின்றன. சென்னையில் நடந்த தகுதிச்சுற்று 1ல் 'நடப்பு சம்பியன்' சென்னை அணி, மும்பையை சந்தித்தது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை 131/4 ஓட்டங்கள் மட்டும் எடுக்க, மும்பை அணி (132/4) 6 விக்கெட் வித்தியாசத்தில் எளிதாக வெற்றி பெற்றது. அடுத்து சென்னை அணி டில்லி அல்லது ஐதராபாத்தை தகுதிச்சுற்று 2ல் சந்திக்க உள்ளது. இதில் வெற்றி பெற்றால் இறுதிப் போட்டிக்கு முன்னேறலாம்.

**இதற்கு முன்...**

'பிளே ஓப்' சுற்று 2011ல் அறிமுகம் ஆனது. சென்னை அணி 2011, 2018ல் கிண்ணத்தை கைப்பற்றியது. இத்தொடர்களில் தகுதிச்சுற்று 1ல் வென்று, நேரடியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறி கிண்ணம் வென்றது.

- 2012ல் 'எலிமினேட்டர்' போட்டியில் மும்பையை வீழ்த்தி, தகுதிச்சுற்று 2ல் டில்லியை வென்று, இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இதில் கொல்கத்தாவிடம் தோற்றது.
- 2015ல் தகுதிச்சுற்று 1ல் மும்பையிடம் தோற்றது. பின் நடந்த தகுதிச்சுற்று 2ல் பெங்களூரை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குச் சென்றது. இறுதிப் போட்டியில் மும்பையிடம் தோல்வி அடைந்தது.
- இம்முறை மும்பையிடம் தோற்ற சென்னை அணி, நாளை நடக்கும் இரண்டாவது தகுதிச்சுற்றில் சாதித்து இறுதிப் போட்டிக்கு முன்னேற வேண்டும். பின் கிண்ணம் வெல்ல அணித் தலைவர் தோனி கைகொடுக்க வேண்டுமென ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.




# 'வங்கப்புலி' கங்குலி

இந்திய அணியின் வெற்றிகரமான அணித் தலைவர் சௌரவ் கங்குலி. கடந்த 1972ல் மேற்குவங்கத்தை சேர்ந்த கங்குலியை ரசிகர்கள் 'கொல்கத்தா இளவரசர்', என்று அழைப்பர். ஆரம்பத்தில் கால்பந்து மீது ஈடுபாடு கொண்ட இவர், பின் கிரிக்கெட் மீது கவனம் செலுத்தினார்.

கடந்த 1992ல் களமிறங்கிய முதல் போட்டியில் 3 ஓட்டங்கள் மட்டும் எடுக்க, அணியில் இருந்து நீக்கப்பட்டார். மீண்டும் ரஞ்சி கிண்ணத் தொடரில் அசத்தி, இந்திய அணியில் இடம் பிடித்தார். 1999ல் நடந்த உலக கிண்ணத் தொடரில், தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் போட்டியில் 97 ஓட்டங்கள் எடுத்தார். இலங்கைக்கு எதிராக 158 பந்துகளில் 183 ஓட்டங்கள் குவித்தார். இதன்மூலம் உலக கிண்ண அரங்கில் ஒரு இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் பட்டியலில் 2வது இடம் பிடித்தார். இத்தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் வரிசையில் கங்குலி (379) மூன்றாவது இடம் பெற்றார்.

கடந்த 2003ல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணியின் தலைவராகக் களமிறங்கினார் கங்குலி. இவர் எடுத்த துணிச்சலான முடிவுகளால் இந்திய அணி வெற்றிகளை குவித்தது. கென்யாவுக்கு எதிரான லீக் (107 ஓட்.), மற்றும் அரையிறுதியில் (111) சதம் கடந்த கங்குலி, அணியை இறுதிப் போட்டிக்கு கொண்டு சென்றார். இதன்மூலம் 1983க்குப் பின் உலக கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்துக்கு இந்திய அணியை அழைத்துச் சென்ற அணித் தலைவர் என்ற பெருமை பெற்றார்.

இத்தொடர் முழுவதும் முதலில் துடுப்பாட்டம் செய்து அதிக ஓட்டங்கள் குவித்து, இந்திய அணி வெற்றி பெற்று வந்தது. இறுதிப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்றும், யாரும் எதிர்பாராத வகையில் 'களத்தடுப்பை' தேர்வு செய்தார். முடிவெடுக்கும் திறமையில் பலம் வாய்ந்த கங்குலிக்கு, இந்த துணிச்சலே பலவீனமாகிப் போனது. இந்திய அணி மீண்டும் கிண்ணம் வெல்ல முடியவில்லை.




மூன்று உலக கிண்ணத் தொடர்களில் (1999, 2003, 2007) பங்கேற்ற கங்குலி, 21 போட்டிகளில் 4 சதம், 3 அரைசதம் உட்பட 1006 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

கடந்த 2008ல் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வு பெற்ற இவர், ஐ.பி.எல்., தொடரில் கொல்கத்தா (2008-10), புனே வாரியர்ஸ் (2011-12) அணிகளுக்காக விளையாடினார். தற்போது பெங்கால் கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக உள்ளார். ஐ.பி.எல்., தொடரில் டில்லி அணிக்கு ஆலோசகராக செயல்படுகிறார்.

**இரண்டாவது இடம்**

கடந்த 2003ல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் துடுப்பாட்டத்தில் அசத்திய இந்தியாவின் கங்குலி, 11 போட்டிகளில், 3 சதம் உட்பட 465 ஓட்டங்கள் எடுத்தார். இதன்மூலம் இத்தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் பட்டியலில் 2வது இடம் பிடித்தார். முதலிடத்தை மற்றொரு இந்திய வீரர் சச்சின் (673 ஓட்டங்கள், 11 போட்டி, ஒரு சதம், 6 அரைச்சதம்) கைப்பற்றினார்.

## நிகாப் அணிந்து வந்த 10 ஆசிரியைகளை வாசலுடன் திருப்பியனுப்பினார் அதிபர்

நிகாப் அணிந்து கொண்டு சேலைக்கு சென்ற புவக்பிட்டிய தமிழ் மகா வித்தியாலயத்தின் 10 ஆசிரியைகளை பாடசாலை அதிபர் திருப்பி அனுப்பியுள்ளதாக மேல் மாகாண ஆளுநரின் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆசிரியைகள் நேற்று முன்தினம் பாடசாலைக்கு சென்றபோது, அவர்கள் உள்ளே நுழைய முடியாத படி வாசல் மூடப் பட்டுள்ளது.

இதனையடுத்து இந்த ஆசிரியைகள் மேல்மாகாண ஆளுநர் அசாத் சாலியை சந்தித்து இது சம்பந்தமாக முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து ஆளுநர் வலயக் கல்விப் பணிப்பாளரை அழைத்து இது தொடர்பாக கலந்துரையாடி, மேல் மாகாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் வேறு பாடசாலைகளுக்கு, ஆசிரியைகளை இடமாற்றம் செய்துள்ளார். (இ-7)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 05.04.1934

இறப்பு 09.05.2018

## நாகமணி அருளானந்தம் (சின்னையா)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்ததப்பா உம் நினைவுகளில் இன்றும்
ஏங்கி ஏம்பலித்துக் கொண்டிருக்கிறோம்
அன்பின் கலங்கரை விளக்கானீர்
பண்பாய் எமை வளர்க்கப்பாடுபட்டீர் எம் உயிர் உள்ளவரை
உமை மறவோம் அருமை அப்பாவே!

தபாற்கந்தோர் அருகாமை,
யோகபுரம், மல்லாவி.

(8710)

தகவல்:
குடும்பத்தினர்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 1944 05 17



மறைவு 2019 04 10

அமரர்

## சோமசேகரம் சாந்தகுணேஸ்வரி

கடந்த 2019.04.10 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் 2019.05.10 வெள்ளிக்கிழமை அன்று அதிகாலை 6.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஊறணி தீர்த்த சமுத்திரத்தில் அஸ்தி கரைக்கப் படும். அதனைத் தொடர்ந்து சபிண்டீகரணக் கிரியைகள் பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வருகை தந்தும், தொலைபேசி, தந்தி வாயில்களாகவும் துண்டுப்பிரசுரம், பதாகைகள், மலர் வளையம் மூலமாகவும் அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்தோர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எம் குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அ.மி.பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

பிறப்பு 01 10 1946



இறப்பு 10 04 2019

கடந்த 10.04.2019 அன்று இறையடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் அமரர் முத்துக்குமாரு தங்கவேல் அவர்களின் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும் நாளை (10.05.2019) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் மதிய போசனமும் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## அமரர் முத்துக்குமாரு தங்கவேல்

(முன்னாள் வல்வை விளையாட்டுக்கழக
நீண்ட வருடகாலத் தலைவரும் ஆலோசகரும்,
சைனிங்ஸ் விளையாட்டுக்கழக மூத்த உறுப்பினரும்)

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நடராஜா வீதி, வல்வெட்டித்துறை.
021 225 5364, 076 082 8552

(இ-6321)

இங்ஙனம்
குடும்பத்தினர்.



கடந்த உயிர்த்த ஞாயிறு அன்று குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு யாழ்.சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் அஞ்சலி நிகழ்வு அதிபர் க.கலியுகன் தலைமையில் நடைபெற்றது.

# போக்குவரத்து விதிகளை மீறிய இருவருக்கு 21000 ரூபா அபராதம்

## யாழ். நீதிமன்ற நீதவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றாத இரு நபர்களுக்கு நேற்று 21 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எஸ்.பீற்றர் போல் தீர்ப்பளித்துள்ளார்.

மது போதையில் வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை ஆகிய இரு குற்றச்சாட்டுகளின் கீழ் இருவருக்கும் எதிராக யாழ்.பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த குற்றங்களை இவ்விருவரும் ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் ஒருவருக்கு பத்தாயிரத்து ஐநூறு ரூபாய் வீதம் இருவருக்கும் 21 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளார்.(இ-5-10)

# சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் தி. ரவீந்திரநாதன் அகில இலங்கை சமாதான நீதவானாக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதவான் அன்னலிங்கம் பிறேம்சங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம்செய்து கொண்டார். இவர் குப்பிழான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் மற்றும் யா/பரியோவான் கல்லூரி பழைய மாணவரும் பல்கலைக்கழக முதுகலைமாணி பட்டம் பெற்றவருமாவார். மற்றும் நீர்வேலி சி.சி.த.க பாடசாலையின் நலன்புரி மன்ற போஷகரும் சமூக சேவையாளருமாவார். (5)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) வருஷ மஹோற்சவம் இன்று 9 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (5)

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டி வேவில் அருள்மிகு விக்னேஸ்வர சுவாமி தேவஸ்தான மஹோற்சவம் இன்று 9 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும்.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் வல்வை ஊறணி சமுத்திரத்தில் தீர்த்தமும் இடம் பெறவுள்ளன. (5)

# மயங்கி விழுந்தவர் மரணம்

(கொடிகாமம்)

பருத்தித்துறை திக்கம் கொட்டடியில் மயங்கி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

அல்வாய் மேற்கு நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான நடராஜா சிவஜெகநாதன் (வயது 58) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் திக்கம் கொட்டடிப் பகுதியில் இடம் பெற்றது. பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (5-114)

# காரைநகர் பாரம்பரிய உணவகத்தில் மரக்கறிகள், பழங்கள் விற்பனை

## சேதன முறையில் உற்பத்தி செய்யப்பட்டவை





(யாழ்ப்பாணம்)

காரைநகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரம்பரிய உணவகத்தினால் அங்குள்ள அரச அலுவலகங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் நன்மை அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்தை கடந்த 29 ஆம் திகதி திங்கட்கிழமை காரைநகர் பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில், காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வி.கேதீஸ்வரதாசன், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் இ.நிஷாந்தன், காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ப.நந்தகுமார், காரைநகர் கிளை இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.புவனேந்திரன் மற்றும் பொதுமக்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு பாரம்பரிய உணவு வகைகளான இலைக்கஞ்சி, ஒடியல் பிட்டு, கீரை வடை, பழரசம், கற்றாழை யூஸ், குழை சாதம் மற்றும் சிற்றுண்டிகளும் விற்பனை செய்யப்படுகின்றன. இரசாயனம் இல்லாமல் சேதன முறையில் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிகள், பழங்களும் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. காரைநகரில் உள்ள பாடசாலைகள் மற்றும் அரச தனியார் அலுவலகங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் காரைநகருக்கு வெளியே இருந்து வருபவர்களுக்கும். அவர்களுக்கு இந்த உணவகம் பெரும் நன்மை அளிக்கிறது.

காரைநகர் கமநல சேவைகள் நிலையத்தால் இந்த உணவகம் மேற்பார்வை செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (5-9)

# இராசி பலன்

**மீனம்:** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், கௌரவமான நாள்.

**மேடம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் காணும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் உண்டு.

**இடபம்:** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்:** எப்படி நினைக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, தொழில் சம்பந்தமாக அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

| சுக் | புத சூரி | | சந் ராகு செவ் |
|---|---|---|---|
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் மூலம், பூராடம் | | |
| சனி, குரு, கேது | | | |

09.05.2019

சித்திரை 26, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

பஞ்சமி முன்னிரவு 11.32 மணிவரை

திருவாதிரை பிற்பகல் 3.32 மணிவரை

சுபநேரம் 7.24-8.54 மணிவரை

இராகுகாலம் 1.24-2.54 மணிவரை

வளவன்

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**மகரம்:** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, தொழில் விருத்தியுண்டு.

**சிம்மம்:** சிறப்பான நாள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**தனுசு:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்படைய வேண்டிய நாள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், தேக நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

**துலாம்:** தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நிலையான வருமானத்திற்கு வழி பிறக்கும், ஆரோக்கியமான நாள்.

# தீவிரவாதத் தாக்குதல்களைத் தடுக்க

# கோத்தபாய போன்று உயர்மட்டக்குழுவை அரசாங்கம் உடன் உருவாக்க வேண்டும்

## ரொபேர்ட் ஓ பிளேக் ஆலோசனை



(கொழும்பு)

தீவிரவாதத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு உயர்மட்ட தொழிற்திறன் வாய்ந்த குழுவொன்றை இலங்கை அரசாங்கம் உடன் உருவாக்க வேண்டும்என்று இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்த கருத்தரங்கில், "சீனா மற்றும் தெற்காசியாவை நோக்கிய அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கை மற்றும் இலங்கைக்கான அதன் அர்த்தம்" என்ற தொனிப் பொருளில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தீவிரவாதத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு முன்னர் கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலராக இருந்த போது உருவாக்கப்பட்டிருந்த தொழிற்திறன் வாய்ந்த உயர்மட்ட குழுவைப் போன்றதொரு குழுவை இலங்கை அரசாங்கம் மீண்டும் உருவாக்க வேண்டும்.

தொழிற்திறன் வாய்ந்த உயர்மட்டக் குழு இலங்கையில் இருப்பது நாட்டுக்கு நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும்.

செப்டெம்பர் 11 தாக்குதலுக்கு முன்னரும், பின்னரும் அமெரிக்கா செய்த தவறுகளில் இருந்து இலங்கை பாடம் கற்றுக் கொள்ள முடியும்.



உண்மையில் போர்க்காலத்தில் பாதுகாப்புச் செயலராக கோத்தபாய ராஜபக்ஷ இருந்த போது இலங்கையில் அத்தகைய குழுவொன்றை வைத்திருந்தார்.

அவர் தனிப்பட்ட முறையில் தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். நாட்டில் உள்ள எல்லா புலனாய்வுக் கிளைகளின் தகவல்களைப் பகிர்ந்து அதனை உயர்மட்டங்களுக்கு கொண்டு சென்று இத்தகைய தாக்குதல்கள் நடக்காமல் இருப்பதை உறுதி செய்தார்.

எனவே, அரசாங்கம் அது போன்றதொரு குழுவை உரு வாக்குவது மிகவும் முக்கியமானது என நான் நினைக்கிறேன்" என்றும் ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்தார். (இ-7)

## இளைஞனின் இடுப்புப்பட்டியிலிருந்து கைக்குண்டு மற்றும் ரவைகள் மீட்பு

நுவரெலியாவின் ஹாவா எலியவிலிருந்து பண்டாரவளைக்கு சென்ற முஸ்லிம் இளைஞன் ஒருவர் நேற்றுக் காலை பண்டாரவளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ் இளைஞனின் இடுப்புப்பட்டியிலிருந்து கைக்குண்டொன்றும், வெற்றுத் தோட்டாக்கள் இரண்டும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர் விசாரணையின் பின்னர் பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவாரென்று பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## ஆயிரத்திற்கும் அதிகமான ரவைகளுடன் முன்னாள் இராணுவச் சிப்பாய் கைது

(கொழும்பு)

நவகமுவ பகுதியில் ஆயிரத்திற்கும் அதிகமான துப்பாக்கி ரவைகளுடன் நேற்றுக் காலை முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் கொண்டுசென்றபோது நவகமுவ பொலிஸாரின் வீதி போக்குவரத்து அதிகாரிகள் முன்னெடுத்த சோதனையின் போது துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் வசமிருந்த ரவைகளில் ரி - 56 ரக ரவைகள் 363, 9 மில்லிமீற்றர் அளவிலான 647 ரவைகள், ரி - 56 ரக மகசீன் 2, 9 மில்லிமீற்றர் நீளமுடைய மகசீன் மற்றும் துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிளின் இருக்கையின் கீழ் வெவ்வேறு பைகளில் வகைப்படுத்தப்பட்ட நிலையில் உரப்பையொன்றில்இருந்து இவை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## மைத்திரி வீட்டுத் திருமணத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய தாக்குதல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேனவின் திருமணம் இன்று இடம்பெறவுள்ளது.

குறித்த திருமணத்தைக் கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதல் காரணமாக ஷங்கிரிலா ஹோட்டல் மூடப்ப ட்டுள்ளது.

இந்நிலையில் திருமண



வைபவம் ஹில்டன் ஹோட்டலுக்கு மாற்றப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதற்கமைய இந்த திருமணம் இன்று கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம் பெறவுள்ளது.

பிரபல வர்த்தகரான அத்துல வீரரத்னவின் மகளான நிபுனி வீர ரத்னவை தஹாம் சிறி சேன திருமணம் செய்து கொள்ள வுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம் 1செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L, Swiss<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு குடியுரிமை<br>தொ.இ: B/9652 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி 3<br>கி.பா: 31 ¾செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:MBBS DOctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Lecturer<br>தொ.இ: G/4419 |
| பிறப்பு: 1980 கிறிஸ்தவம்<br>தகைமை/தொழில்:A/L,தொழிற்படு முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: A/Lபடித்தபெண், RCவிரும்பதக்கது<br>தொ.இ: B/9654 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: 23 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:CBF, DBF,வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரசதனியார் தொழில். சைவபோசனம்<br>தொ.இ: G/4441 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:சுவாதிகி.பா: 42<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:O/L,கடை ஊழியர்<br>எதிர்பார்ப்பு: சாதாரணபெண்.<br>தொ.இ: B/9655 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: 43செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:M.Scபட்டதாரி, தனியார்தொழில், India<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/4445 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்:சதயம் 2<br>கி.பா: 37செவ் 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:ACCA, B.Com, Accountant, UK<br>எதிர்பார்ப்பு: A/L,பட்டதாரி, ஆங்கில தகைமை விரும்பதக்கது<br>தொ.இ: B/9656 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா: 42செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: 10ம் தரம், India<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு. விவாகரத்தும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/4446 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# குண்டுத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய மைத்திரி உடன் பதவி விலக வேண்டும்

## சரத் பொன்சேகா வலியுறுத்து



(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடன் பதவி விலக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.**

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர், "இந்தத் தாக்குதல் குறித்து முன்னதாகவே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அயல் நாடுகளும் இது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்நிலையில், நாட்டின் பாதுகாப்பு விடயத்தை யாரும் நிராகரிக்கவோ, கவனக்குறைவாக எடுத்துக்கொள்ளவோ கூடாது. உண்மையில் அவர்களின் பணியைச் செய்யவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாகவே பாதுகாப்பு சபை கூட்டத்தில் தாக்குதல் குறித்து 15 தடவைகளுக்கு மேல் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் கூறும் போது அது குறித்து ஜனாதிபதி கண்டுகொள்ளவில்லை.

அவரிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. பாதுகாப்பிற்குரிய முக்கியத்துவம் வழங்கவில்லை. அரசியலுக்காகப் பாதுகாப்பு விவகாரங்களை விட்டுக்கொடுக்கக் கூடாது.

இந்த விடயத்தை மிகத் தீவிரமாக கவனத்தில்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், இந்தத் தாக்குதலுக்கு அரசியல் காரணம் இல்லை. கவனக்குறைவே இந்தத் தாக்குதலுக்கு காரணம்.

இந்தத் தாக்குதல் குறித்து பொலிஸ்மா அதிபர் ஜனாதிபதியிடம் கூறியுள்ளார். எனினும், ஜனாதிபதி இதனை முற்றிலும் நிராகரித்து விட்டார். அதனை அவர் கண்டுகொள்ளவில்லை.

இந்த நிலையில் தாக்குதலுக்கான முழுப்பொறுப்பையும் ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத்தில் இலங்கையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களுக்கு பொறுப்பேற்று தாம் பதவிவிலகப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதிபடத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தீவிரவாதிகளின் ஆயுதங்கள் மறைக்கப்பட வாய்ப்புக்கள் அதிகம்

## ஹிஸ்புல்லா மீது யோகேஸ்வரன் சாடல்



(ஏறாவூர்)

மட்டக்களப்பில் இஸ்லாமிய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகள் சரியான முறையில் இடம்பெறவில்லையெனவும், தீவிரவாதிகளின் ஆயுதங்கள் மறைக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் உள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தௌஹீத் ஜமாத் அமைப்பு செயற்பட்ட அத்தனை விதமும் ஹிஸ்புல்லாவிற்கு நன்கு தெரியும். அவரிடம் உரிய முறையில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியும் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

தற்போதைய அரசாங்கத்திற்கு முஸ்லிம் மக்களின் வாக்குகள் மாத்திரமே முக்கியமானதாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இரு முஸ்லிம் குழுவினர் இடையே மாத்தளையில் முறுகல் நிலை!



(மாத்தளை)

மாத்தளை - வரகாமுர பகுதியில் இரண்டு முஸ்லிம் குழுவினர் இடையே நேற்று முன்தினம் இரவு முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

முறுகல் நிலைமையைக் கட்டுப்படுத்திய பின்னர் சம்பவம் தொடர்பில் ஒரு தரப்பினரில் சிலர், அவர்களின் பாதுகாப்பிற்காக பொலிஸ் பொறுப்பில் கொண்டுவரப்பட்டுள்ளனர். (இ-7)

## ஆபத்துக்கள் ஏற்படலாம்!

# சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியது

(கொழும்பு)

சந்தேகநபர்கள் அல்லது குற்றவாளிகளை அவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த தேவையான திருத்தங்களைச் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்படும் நபர்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டும்.

இதன் காரணமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு குறிப்பிடத்தக்க ஆபத்துகள் ஏற்படலாம் என்பதால், இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

1979 இலக்கம் 15 குற்றவியல் வழக்கு ஏற்பாடுகள் சட்டத்தில் திருத்தங்களை செய்யவே அமைச்சர் இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள அமைச்சரவைக்கு இந்த யோசனையை முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் தாக்குதல் நடத்திய குண்டுதாரிகள் இந்தியா சென்றதை உறுதிப்படுத்திய புலனாய்வுத்துறை

(டில்லி)

உயிர்த்த ஞாயிறு தினமன்று இலங்கையில் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டவர்களில் இருவர், இந்தியாவுக்கு பயணம் செய்துள்ளனர்.

இதனை இந்தியப் புலனாய்வுத்துறையினர் உறுதி செய்துள்ளதாக இந்திய ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலங்கையின் இராணுவத்தளபதி மகேஷ் சேனநாயக்க கூறியதை போல் அவர்கள் பயிற்சிகளுக்காக இந்தியா வந்தார்கள் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என்று அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், சங்ரிலா ஹோட்டலில் தாக்குதலை நடத்திய, இன்ஹாம் அஹமட், சினமன் ஹோட்டலில் தாக்குதலை நடத்திய மொஹமட் இப்ராஹிம் ஆகியோர் 2012ஆம் ஆண்டில் வர்த்தக விசாவில் இந்தியாவுக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது அவர்கள், பெங்களூர், கொச்சி, சென்னை, மும்பை மற்றும் டில்லி ஆகிய இடங்களுக்கு சென்றுள்ளதாகவும் அந்த ஊடகத்தின் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# தற்கொலைத் தாக்குதலுக்காக மனைவியை கொடுமைப்படுத்திய ஐ.எஸ்.தீவிரவாதி!

## விசாரணையில் வெளிவந்த பல தகவல்கள்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்ட பாத்திமா தொடர்பில் அவளது தாய் பல தகவல்களை வெளிப்படுத்தியுள்ளார்.

தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்ட முக்கிய நபர்களில் பாத்திமா லதீபாவும் ஒருவர். கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி பிற்பகல் 1 - 2 மணியளவில் மாவனெல்லை பகுதியில் தந்தையின் வீட்டில் வைத்து பத்திமா கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட பாத்திமாவுக்கு 24 வயது.

பாத்திமா மாவனெல்லை பகுதியிலுள்ள புத்தர் சிலைகளை உடைத்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான 29 வயதுடைய மொஹமட் இப்ராஹிம் சாதிக் அப்துல்லாவின் மனையாளாவாள். சாதிக் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன்தொடர்புடைய பிரதான சந்தேக நபர் என தற்போது பாதுகாப்பு பிரிவினர் கண்டுபிடித்தனர்.

இந்நிலையில், பொலிஸார் சில புகைப்படங்களை வெளியிட்டு அவர்களை கண்டுபிடித்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

அதற்கமைய கைது செய்யப்பட்ட பாத்திமா சஹீடாவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய பல தகவல் வெளியாகியுள்ளன.

கணவன், பாத்திமாவை அழைத்துச் சென்று மறைந்திருந்தான். பொலிஸாருக்கு தகவல் வழங்கினால் கொலை செய்து விடுவேன் என மிரட்டி பாத்திமாவுக்கு ஒரு போலி அடையாள அட்டையும் வழங்கியுள்ளான். அந்த அடையாள அட்டை மாத்தறை பிரதேசத்தை சேர்ந்த பெண்ணுடையதென தெரியவந்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி பாத்திமா தனது குழந்தையுடன் தாய் வீட்டிற்கு சென்ற நிலையில் சாதிக் கண்டி பகுதிக்கு சென்றுள்ளார் என பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

பாத்திமா சென்றது வெள்ளிக்கிழமை தினத்திலாகும். ஓய்வு பெற்ற ஆசிரியரான தனது தந்தை பள்ளிவாசலுக்கு சென்றிருந்தார். வீட்டின் முன் பகுதி பூட்டியிருந்தமையால் பின்வாசல் பகுதியில் நின்று தாயை பாத்திமா அழைத்துள்ளார்.

இதன் பின்னர் நடந்த சம்பவம் குறித்து பாத்திமாவின் தாய் தெரியப்படுத்தியுள்ளார்.

"எனது மகளின் பெயர் பாத்திமா லதீபா என ஊடகங்களில் வெளியாகியது. எனினும் பாத்திமா சஹீடா என்பதே அவளது உண்மையான பெயராகும். அவள் எனது மூத்த மகள். எனக்கு 4 மகள்கள் உள்ளனர்.

நால்வரும் படிப்பில் சிறந்தவர்கள். பாத்திமாவும் பல்கலைக்கழகம் செல்வதற்கு வாய்ப்பு பெற்றவள். எனினும் 2015 ஆம் ஆண்டு அவளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது. கிடைத்த வரனுக்கமைய அவளுக்கு திருமணம் நடந்தது.

மகளின் மாமனார் மிகவும் நல்ல மனிதர். அவர் ஒரு மௌலவி. சிறந்த குணம் படைத்த ஒருவர் எனினும் அவரது மகன் இவ்வாறு நாட்டுக்கு தீ வைப்பார் என நினைக்கவில்லை.

எனது மகளுக்கு ஒன்றும் தெரியாது. புத்தர் சிலை உடைப்பு விவகாரத்தின் பின்னர் எதுவும் சொல்லாமல் மருமகன் மகளை அழைத்து சென்றுள்ளான். மகள் தொடர்பில் தகவல் அறிந்தால் அறிவிப்பதாக பொலிஸாருக்கு நாங்கள் வாக்குறுதி வழங்கினோம். நாங்களும் நல்ல மக்களுடன் தான் வாழ்கின்றோம். எங்களுக்கும் இந்த நாட்டின் சமாதானமே முக்கியமாகும்.

அதற்கமைய பின்வாசல் வழியாக வந்த மகள், தந்தை எங்கே? தந்தையுடன் பொலிஸ் நிலையம் செல்ல வேண்டும் எனக் கூறினாள். அப்போதே மகளுக்கு ஒன்றும் தெரியாதென்பது எனக்குத் தெரியவந்தது.

மகளிடம் பேசினேன் இது தொடர்பில். அப்போது கணவன் தன்னை மிகவும் கொடுமைப் படுத்தியதாகவும், தன்னை மனைவியாகவே பார்க்கவில்லை எனவும் மகள் கூறினாள்.

தான் செய்யும் விடயங்களை வெளியே கூறினால் கொலை செய்யப்படுவாய் என கணவன் மிரட்டியுள்ளான். பல இடங்களில் மகளை அடைத்து வைத்துள்ளான்.

• திடீரென அவனுக்கு அதிகம் பணம் கிடைத்துள்ளது. வீட்டிற்கு தேவையான அனைத்திற்கும் அதிகமாக பணம் செலவிட்டுள்ளான். எனினும் குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற தினத்தன்று கணவர் பதற்றமாக இருந்துள்ளான். எனினும் பாத்திமாவுக்கு அந்த தகவல் தெரியாது.

கணவனின் கொடுமைகளை தாங்கிக்கொண்டு பாத்திமா அமைதியாகவே இருந்துள்ளாள். அத்துடன் நாங்கள் நினைப்பது போன்று அல்ல அவன், மிகவும் ஆபத்தானவன் எனவும் அவனுக்கு பெரிய குழு ஒன்றும் உள்ளதெனவும் பாத்திமா கூறியுள்ளாள். அதற்கமைய பாத்திமாவின் தந்தையை அழைப்பதற்காக பள்ளிவாசலுக்கு சென்றேன்.

அவருடன் பேசிய பின்னர் மகள் இருக்கும் இடத்தை பொலிஸாருக்கு தெரியப்படுத்தினேன். மகள் கைது செய்யப்பட்டு 24 மணித்தியாலத்திற்குள் மருமகன் கைது செய்யயப்பட்டான்" என பாத்திமாவின் தாய் தெரிவித்தார். (இ-7)

## மண்மேடு விழுந்ததில் இருவர் பலி!

(பேராதனை)

பேராதனை, கன்னொருவ பகுதியில் நேற்று முன்தினம் மாலை மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் 64, 34 வயதுடையவர்கள் எனவும், வீடொன்றை நிர்மாணிப்பதற்காக அத்திபாரம் வெட்டிக் கொண்டிருந்தபோதே மண்மேடு சரிந்து வீழ்ந்து உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## பாதுகாப்புச் செயலரைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்





(கொழும்பு)

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் துங்-லாய் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் எஸ்.எச்.எஸ்.கோட்டேகொடவை நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கிடையே சிநேகபூர்வ கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதுடன் இச்சந்திப்பினை நினைவு கூரும் வகையில் அவர்களிடையே நினைவுச்சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இந்நிகழ்வில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா, ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி தூதுவர் தோர்ஸ்டென் பார்க்பிரெட் ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ-7)

## பாகிஸ்தான் அகதிகளுக்கு எதிராக

# அம்பலாந்தோட்டையில் ஹர்த்தால்

(அம்பலாந்தோட்டை)

அம்பலாந்தோட்டையில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று காலை முதல் நகரில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு, வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

ரீதிகம அரச நிவர்தன இல்லத்திற்குப் பாகிஸ்தான் அகதிகள் சிலரைக் கொண்டுவருவதற்குத் தென் மாகாண ஆளுநர் முன்னெடுத்துள்ள நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை ரீதிகம பிரதேச மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)






# க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள உரிய முறையில் முழுமையாக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை அதிபர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது வரை பரீட்சார்த்திகள் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் 50 சதவீதமே கிடைத்துள்ளதாகவும் விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைப்பதில் கால தாமதத்தை ஏற்படுத்துவதால் பரீட்சைகளுக்கு முன் அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுப்பதில் சவாலை சந்திக்க நேர்வதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை உரிய முறையில் முழுமையாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பாதவர்கள் விரைந்து அனுப்பி வைக்குமாறு ஆட்பதிவு திணைக்களம் கோரியுள்ளது. (இ-7)

# வெளிநாட்டு பிரஜைகளை வவுனியாவில் தங்க வைக்க நடவடிக்கை ஏற்பாடுகளை பார்வையிட அமைச்சர் நேற்று விஜயம்



(குருமன்காடு)

வெளிநாடுகளில் இருந்து வருகை தந்து நீர்கொழும்பில் உள்ள வெளிநாட்டுப் பிரஜைகளில் 169 பேரை வவுனியாவில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சர் திலக்மாரப்பன நேற்று வவுனியாவிற்கு விஜயம் செய்து இதற்கான ஏற்பாடுகளைப் பார்வையிட்டிருந்தார்.

நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாதத் தாக்குதலையடுத்து அகதி அந்தஸ்து கோரிய நிலையில் நீர்கொழும்பில் வசித்து வந்த பாகிஸ்தான், மியன்மார், சிரியா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 700 அகதிகளை அங்கிருந்து வெளியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. இதனையடுத்து அந்த மக்களை வேறு பகுதிகளில் தங்க வைப்பதற்கான முயற்சிகளை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அகதிகளுக்கான உயர்தானிகராலயம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் வெளிநாட்டு பிரஜைகள் 700 பேரில் 169 பேரை வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள வட மாகாணத்திற்குரிய பலநோக்கு கூட்டுறவுச் சங்க பயிற்சிப் பாடசாலையில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளைப் பார்வையிடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் திலக்மாரப்பன வவுனியாவிற்கு விஜயம் செய்து தங்க வைப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட இடத்தை பார்வையிட்டதுடன், மாவட்ட செயலகத்தில் உயர்மட்ட கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

வவுனியா அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் திலக்மாரப்பன, மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா, முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம், வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தலைவர் து.நடராஜசிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (9-250)

## ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் வெளிநாட்டு பிரஜைகளை குடியேற்றுவது தொடர்பான கலந்துரையாடல் வெளிவிவகார அமைச்சர் திலக்மாரப்பனவின் பங்குபற்றுதலுடன் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலில் ஊடகவியலாளருக்கு அனுமதி மறுக்கப்படடிருந்தது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனீபா தலைமையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலிற்கு ஊடகவியலாளர்கள் பொலிஸாரின் உதவியுடன் வெளியேற்றப்பட்டு மூடிய அறைக்குள் இரகசியமாக நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலுக்கு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், மத குருமார்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (9-250)

## தனிமையில் வசிக்கும் முதியவர்களுக்கு உலர் உணவுப்பொதி வழங்கல்



(முல்லைத்தீவு)

மாங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையிலுள்ள முதியவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் பெறுமதியில் உலர் உணவுப் பொருட்கள் வட்டு இந்து வாலிபர் சங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

மாங்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக அன்றாட உணவுத்தேவைக்காக அல்லல்படும் 44 முதியவர்களுக்கு வட்டு இந்து வாலிபர் சங்கத்தினால் தொடர்ச்சியான முறையில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று 7 ஆம் கட்டத்தின் தொடர்ச்சியாக 32 முதியவர்களுக்கு தலா 3125 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (9)



செரண்டிப் சிறுவர் இல்ல நுண்கலைக் கல்லூரியில் இலவச கல்வியை தொடரும் மாணவர்களுக்கான இலவச அடிப்படை யோகாப் பயிற்சிகளின் இறுதி நாள் நிகழ்வு நேற்று கிளிநொச்சி வளாகத்தில் இடம் பெற்றது. செரண்டிப் சிறுவர் இல்லத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யோகா வளவாளர் பு.பிரணவன் யோகா பயிற்சிகளை வழங்கினார்.

## கால்நடை உற்பத்திச் சுகாதார திணைக்களத்தால் கிளிநொச்சியில் 10 வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில், கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு, இதுவரை மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ், 2.60 மில்லியன் ரூபாவும் மத்திய அரசாங்கத்தின் நிதியொதுக்கீட்டின் கீழ் 4.17 மில்லியன் ரூபாவும் கிடைக்கப்பெற்றிருப்பதாக, கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 4 வரையான வேலைத் திட்டங்களும் மத்திய அரசாங்கத்தின் கீழ் 6 வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை, கடந்தாண்டில், பல்வேறு திட்டங்களுக்கு மத்திய, மாகாண அமைச்சுகள் என்பவற்றின் ஊடாக 44.50 மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கப்பெற்று, அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9)

## வற்றாப்பளை பொங்கல் உற்சவத்தில் உணவு வியாபார நிறுவனங்கள்

### விதிமுறைகளைப் பேண வேண்டும்– அரச அதிபர்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை அம்மன் ஆலயப் பொங்கல் உற்சவ காலத்தில் உணவு வியாபார நிறுவனங்கள் உரிய முறையில் விதிமுறைகளை பேண வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்படி விடயம் குறித்து ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

உற்சவ காலத்துக்கென தயாரித்த உணவுகள் (ஐஸ்கிறீம் , இனிப்பு சிற்றுண்டி வகைகள் ) விற்பனைக்கு கொண்டு வருவோர், வெளி இடங்களில் உணவகம் வைத்திருந்து ஆலயத்தில் உணவக விற்பனையில் ஈடுபட வருவோர் அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டும். அத்துடன் விற்பனையில் ஈடுபடும் அனைவரும் மருத்துவச் சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.

ஆலயத்தில் மட்டும் உணவகம் நடத்த வருவோர் 13.05. 2019 ஆம் திகதிக்கு முன்பு முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேரடியாக வந்து தொடர்பு கொள்ளவும்.

சர்பத் விற்பனையாளர்கள் சில்வர், அலுமினியம் அல்லது கண்ணாடிப் பாத்திரங்களில் வழங்க வேண்டும். அவ்வாறு பாவிக்கப்படும் பாத்திரங்கள் ஓடும் நீரில் கழுவி பயன்படுத்த வேண்டும்.

அத்துடன் குளிர்பானங்களுக்காக பயன்படுத்தும் ஐஸ் கட்டிகள் உணவுக்காக அனுமதிக்கப்பட்ட ஐஸ்கிறீம் கடைகளில் மாத்திரம் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் அந் நிலையில் பற்றுச்சீட்டு வைத்திருக்க வேண்டும்.

காவடி உரிமையாளர்கள் அயடின் கரைசலில் செடில்களை கட்டாயமாக கழுவி பயன்படுத்த வேண்டும் மற்றும் பொலித்தீன் பாவனையை தவிர்த்தல் வேண்டும் என மாவட்ட அரச அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)




## தங்கூசி வலைகளை வைத்திருந்த மூவர் கைது



வவுனியாவில் தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து நேற்று மதியம் நடத்திய திடீர் சுற்றிவளைப்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா குளத்தில் இடம் பெற்ற இந்த சுற்றிவளைப்பில் நன்னீர் மீன்பிடித்தலுக்காக தடை செய்யப்பட்ட சட்டவிரோதமான தங்கூசி வலைகளை வைத்திருந்த குற்றத்திற்காக மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் பிராந்திய நீரியல் விரிவாக்கல் அலுவலகத்தின் மாவட்ட நீர் உயிரின செய்கை விரிவாக்கல் உத்தியோகத்தர் யோகநாதன் நிசாந்தன் தலைமையில் அலுவலக உத்தியோகத்தர்களுடனும் மடுகந்தை விசேட அதிரடிப் படையின் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் அழுனுடீரவின் நெறிப்படுத்தலில் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து இச் சுற்றி வளைப்பினை மேற் கொண்டிருந்தனர். இதேவேளை, கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (9-250)

# ஜனநாயக போராட்டங்களை மழுங்கடிக்கவே அவசரகாலச் சட்டம் - கேப்பாபிலவு மக்கள்

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை கைது செய்ததன் மூலம் தாயகத்தில் இடம்பெற்றுவரும் ஜனநாயகப் போராட்டங்களை மழுங்கடிப்பதற்கு அரசு முயற்சி செய்கிறது என கேப்பாபிலவு நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்குறித்த விடயத்தை தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக, நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சு.லீலா மேலும் தெரிவிக்கையில்,




நாம் கடந்த 10 வருடங்களாக தாயகத்தில் ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். காணாமல் போனவர்களுக்கு நீதி கோரியும் அரசியல் கைதிகளை விடுவிக்கவும் நிலத்தை மீட்கவும் தொடர்ச்சியாக இன்று வரை போராடி வருகிறோம்.

இந்த நிலையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் கைது நடவடிக்கை அனைவரையும் அச்சமடையச் செய்யும் செயற்பாடு என்பதுடன் இளைஞர் மத்தியில் விரக்தியையும் உண்டுபண்ணியுள்ளது.

கடந்த மூன்று வருடகாலமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மற்றும் மாவீரர் நாள் நினைவேந்தல்களை நினைவுகூர அரசாங்கம் அனுமதி வழங்கிய நிலையில் ஏன் விடுதலைப் புலிகளின். புகைப்படங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் பல்கலைக்கழக மாணவர்களை மாத்திரம் கைது செய்ய வேண்டும்.

எனவே ஜனாதிபதியும் தமிழ் அரசியல் தலைவர்களும் மாணவர்களின் விடுதலை குறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவோம். போராட்டங்களை மழுங்கடிக்கும் முயற்சியை அரசு கைவிடவேண்டும்.

தற்போது கொண்டுவந்துள்ள அவசரகாலச் சட்டம் காரணமாக ஜனநாயக ரீதியில் நாம் மேற்கொண்டுவரும் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு குறைவடைந்துள்ளது. அவர்கள் பயத்தில் முடக்கப்பட்டுள்ளார்கள். அதேபோல் நாமும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கைது செய்யப்படலாம் என்ற அச்சத்தின் மத்தியிலேயே போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-281)




# தினச் சந்தைக்கான அடிக்கல் நாட்டல்



(மன்னார்)

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன், மன்னார் முருங்கன் பகுதியில் தினச்சந்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மன்னார் முருங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அருகில் குறித்த சந்தைக்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற அடிக்கல் நாட்டும் நிகழ்வில், மதத் தலைவர்கள், நானாட்டான் பிரதேச சபையின் உப தவிசாளர் புவனம், நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் பிரதிநிதி நடேசானந்தன்,நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்களான ஜொனி மற்றும் திருமதி.வோல்ட்சன், நானாட்டான் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர். (9)

# மன்னார் புதைகுழி

## நீதிமன்றால் கோரப்பட்ட அறிக்கை விரைவில்

மன்னார் மனித புதைகுழி குறித்து நீதிமன்றத்தால் கோரப்பட்ட அறிக்கை விரைவில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கை எதிர்வரும் மாதம் 31ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, அகழ்வுப்பணிகள் குறித்து ஆலோசனை வழங்கும் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கைக்கு தேவையான அனைத்து சோதனைகளும் நிறைவடைந்துள்ளன.

அகழ்வின்போது மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தவிர்ந்த ஏனைய பொருட்கள் நீதிமன்ற அனுமதியின் பேரில் மீண்டும் சோதனைக்கு உட்படுத்தவுள்ளது.

இது குறித்து எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

அறிக்கையை வழங்கியதன் பின்னர் அகழ்வுப்பணிகளை தொடர்வதா இல்லையா என்பது தொடர்பில் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் என மேலும் தெரிவித்துள்ளார்.கடந்த வருடம் மார்ச் மாதம் மன்னார் சதொச கட்டட நிர் மாண நடவடிக்கைகளுக்காக நிலத்தைத் தோண்டிய போது மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டதை தொடர்ந்து அகழ்வுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அகழ்வுப் பணிகளின்போது மீட்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகள் அமெரிக்காவின் பீட்டா நிறுவனத்திற்கு சோதனை களுக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

இதன்போது குறித்த மாதிரிகள் 350 முதல் 600 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்துக்குரியவை என அமெரிக்காவின் பீட்டா நிறுவனத்தினால் கால எல்லை நிர்ணயிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9)

# அபிவிருத்தி செய்யப்படும் வண்ணாங்குளம்

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு அம்பாள்புர கிராம அலுவலர் பிரிவிலுள்ள வண்ணாங்குளம், சுமார் ஐந்து கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

இதற்கான நிதியை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகிய இருவரும் வழங்கியுள்ளனர்.

குறித்த குளம் பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமல் தூர்ந்துபோய் இருந்தமையால், கிராமத்தில் வசித்து வரும் 260 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட முடியாத நிலைக்குத்தள்ளப்பட்டிருந்தனர்.

விவசாயத்தையே, வாழ்வாதாரமாகக் கொண்ட இவர்கள் தூர இடத்துக்குச் சென்று விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்களுக்கு குளத்தைச் சுற்றி சொந்தக் காணிகள் இருந்த போதும் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு தண்ணீர் வசதி இல்லாமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, குளத்தை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 கோடியே 50 இலட்சம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து வழங்கியுள்ளனர். (9)

# கடல் அட்டைகளுடன் ஒருவர் கைது

வடமத்திய கடற்படையினர் மற்றும் மன்னார் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து வங்காலை பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமாக கடல் அட்டைகளை பிடித்து மறைத்து வைத்திருந்ததாக சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வங்காலை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவரிடமிருந்து 720 கிலோ கிராம் தொகை கடல் அட்டைகளும் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பிரதி கடல்வள பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (9)

# மன்னாரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



நாடு பூராகவும் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் டெங்கு நோய் பரவுவதை தடுக்கும் விதத்திலும் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய நீர் நிலைகள் மற்றும் பிரதேசங்களை அடையாளப்படுத்தும் பணிகள் நேற்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார பணிமனை ஊழியர்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்கள் தலைமையில் இடம் பெற்றது.

மன்னார் நகர எல்லைக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்கள், பொது இடங்கள், அரச அலுவல

டுத்தும் நடவடிக்கைகள இடம பெற்றன.

அதன் அடிப்படையில் டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வாய்ப்புக்கள் காணப்படும் வீடுகளின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் உடனடியாக குறித்த நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக காணப்படுகின்ற காரணிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை குறித்த கட்டளைகளை கருத்தில் கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9-285)


# குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு வவு. நகர சபையில் அஞ்சலி

(குருமன்காடு)

குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு வவுனியா நகர சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியா நகரசபையின் விசேட அமர்வு நேற்று நகர சபையின் தவிசாளர் இ. கௌதமன் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா நகரசபையின் சுகாதார ஊழியர்கள் நான்கு பேர் பணியின் போது மரிணித்திருந்த நிலையில் அவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கான விசேட கூட்டம் நடைபெற்றது.



இவ் விசேட அமர்வில் அண்மையில் மரணமான சுகாதார ஊழியர்களின் குடும்பங்களுக்கு தற்காலிகமாக தலா ஒன்றரை இலட்சம் ரூபா நகரசபையால் வழங்குவதாக முடிவு எடுக்கப்பட்டதுடன், நகரசபை உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் நிதி திரட்டி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நகரசபை உறுப்பினர் சேனாதிராஜா தெரிவிக்கையில்,

பணியின் போது மரணித்த சுகாதாரத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அதே நேரம் அவர்களுடைய மரணம் தொடர்பாக முழுமையான விசாரணை ஒன்று மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்த நகரசபை தவிசாளர் இ.கௌதமன் விசாரணை குழு ஒன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்திருந்தார்.

தொடர்ந்து உரையாற்றிய நகரசபை உறுப்பினர் க.சந்திரகுலசிங்கம் (மோகன்), பணியின் போது இறந்த நகரசபை சுகாதாரத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்கக்கூடிய வகையில் சபை பரிசீலிக்க வேண்டும். வர்த்தமானியிலும் அவ்வாறான ஒரு சரத்து இருப்பதாக சுட்டிக்காட்டினார்.


பணியின் போது மரணித்த சுகாதாரத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 25 இலட்சம் ரூபா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நகரசபை உறுப்பினர் பாலசிங்கம் பிரசன்னா முன்வைத்திருந்ததுடன் அதற்கான முயற்சியை சபை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

தீவிரவாதிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட பொது மக்களுக்கு சபையில் உறுப்பினர்களால் மெழுகுவர்த்தி ஏத்தி அஞ்சலி செலுத்தப்பட்டது. (9-250)



# பாரதம்

## பிரதமர் மோடி குறித்து சர்ச்சைக் கருத்து; நிபந்தனையற்ற மன்னிப்புக்கோரிய ராகுல்



(சென்னை)

பிரதமர் நரேந்திர மோடியை திருடன் என கூறியமை குறித்து காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி நிபந்தனையற்ற மன்னிப்பு கோரியுள்ளார்.

இது குறித்த வழக்கு நேற்று புதன்கிழமை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதமர் மோடியை திருடன் என நீதிபதி கூறியதாக தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பேசியமைக்கு நிபந்தனையற்ற மன்னிப்பைக் கேட்டுள்ளதுடன், இது குறித்து 3 பக்கங்கள் கொண்ட பிரமாணப் பத்திரத்தையும் தாக்கல் செய்துள்ளார்.

ரஃபேல் ஒப்பந்த விவகாரத்தில் பிரதமர் மோடியைத் திருடன் என்று உயர் நீதிமன்ற நீதிபதியே கூறிவிட்டதாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தேர்தல் பரப்புரை கூடத்தில் விமர்சித்திருந்தார்.

இந்நிலையில், ராகுல் காந்திக்கு எதிராக பா.ஜ.க சார்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## உலகளவில் அதிகம் பேர் பின்பற்றும் அரசியல் தலைவராக மோடி இரண்டாவது இடத்தில்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை பின்னுக்குத் தள்ளி உலகளவில் அதிகம் பேர் பின்பற்றும் அரசியல் தலைவராக இரண்டாமித்திற்கு முன்னேறியுள்ளார்.

பேஸ்புக், டுவிட்டர் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைத்தளங்களில் நரேந்திர மோடியை சுமார் 110.912.648 மில்லியன் பேர் பின்பற்றுகின்றனர் என SEMrush எனும் ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது.

அதேநேரம் பிரதமர் மோடி சமூக வலைத்தளத்தில் 13.7 மில்லியன் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளதாக பேஸ்புக் உத்தியோகபூர்வ அறிக்கை வெளியிட்டுள்ளது.

உலகம் முழுக்க சுமார் 110 மில்லியனுக்கும் அதிகமான பொலோவர்களை கொண்டு பிரதமர் நரேந்திர மோடி டொனால்ட் ட்ரம்ப்பை பின்னுக்குத் தள்ளியிருக்கின்றார்.

டொனால்ட் ட்ரம்ப்பை உலகளவில் சுமார் 96 மில்லியன் பேர் பின்பற்றுகின்றனர். ஆனால் டுவிட்டரில் அதிகம் பேர் பின்பற்றும் அரசியல் தலைவர்களில் டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது இடத்தில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## பயங்கரவாத செயல்களில் ஈடுபட்ட இளைஞனுக்கு 16 ஆண்டுகள் சிறை

### -சிக்காக்கோவில் சம்பவம்-

(மொஸ்கோ)

சிக்காக்கோவில் கடந்த 2012 ஆம் ஆண்டு கார் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்த முற்பட்ட வாலிபர், பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாக 16 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிக்காக்கோவிலுள்ள மலைப் பகுதியைச் சேர்ந்தவர் அடல் தாவூத் (வயது-25). இவர் கடந்த 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் 14ஆம் திகதி அப்பகுதியில் இருக்கும் மதுபானசாலை ஒன்றின் அருகில் கார் வெடிகுண்டு தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளார். இந்த தகவல் குறித்து பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து தாவூத்தை தேடி வந்த தனிப்பிரிவுப்படை பொலிஸார், சில மாதங்களில் அவரை கண்டறிந்தனர். பின்னர் தாவூத், பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டது நிரூபிக்கப்பட்டதால் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தாவூத் சிறையில் இருக்கும் போது, பொலிஸார் அவர் வசித்த இடத்தில் விசாரிக்கையில், மேலும் 2 கொலை முயற்சி சம்பவங்களில் ஈடுபட்டிருந்தது தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து தாவூத் மீது பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டது தொடர்பான வழக்குப் பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை நேற்று விசாரித்த நீதிமன்றம், தாவூத்துக்கு 16 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது. (7)

## மசூதிக்கருகே வெடிப்பு...
## 25 பேர் பரிதாபமாக உ...



17 பேர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் லாகூர் நகரிலுள்ள டேடா... அண்மித்த பகுதியில் இடம்பெற்ற வெடிப்பு... 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் இரண்டாவது மிகப்பெரிய நகரில் நேற்று புதன் கிழமை காலை இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் 17 பேர் படுகாயமடைந்திருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிப்பில் பொலிஸ் வாகனமொன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் 17 பேர் படுகாயமடைந்துள்ள நிலையில், அவர்களில் ஐவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த... டைந்துள்... ஆரம்பிக்க...

இச்சம்... அமைப்பு... குறிப்பிடத்...

## ட்ரம்பின் முகமூ...
## திருடன் கை...

(வோஷிங்டன்)

அவுஸ்திரேலியாவில் அமெரிக்க ஜனாதிப... ட்ரம்பின் முகமூடி அணிந்து கடைகளில் திருடி... திருடனின் காணொலி சமூக வலைத்தளங்களி... வைரலாகி வருகிறது.

அவுஸ்திரேலியாவில் திருடன் ஒருவன் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் போன்ற முகமூடியுடன் கடைகளில் திருடியுள்ளதாகவும், ஸ்ட்ராத்பைன்... பகுதி கடைத் தெருவிற்குள் ட்ரம்ப் முகமூடியுடன் நுழைந்த திருடன் கடையின் கண்ணாடியை உடைத்து விலையுயர்ந்த கைக் கடிகாரங்கள்... அருகில் இருந்த இலத்திரனியல் கடையில் சில... பொருட்களையும் எடுத்துச் சென்றுள்ளதா... அந்நாட்டு பொலிஸார் தெரிவித்தனர்.

இவை அனைத்தும் ஆங்காங்கே பொருத்தப்... பட்டிருந்த கண்காணிப்புக் கமராக்களில் பதிவா... கியுள்ளது. இதில் கடையில் இருந்து வெளியே... வரும் போது கையில் இருந்த பொருள் கீழே...

## அமெரிக்கா - சீனா மோதல் போக்கால் உலக பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தல்

### சர்வதேச நிதியம் எச்சரிக்கை




(பாரிஸ்)

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் அதிகரித்து வரும் வரிவிதிப்பு தொடர்பான மோதல் போக்கு உலக பொருளாதாரத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என சர்வதேச நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே மறைமுக வர்த்தக போர் நடைபெற்று வருகிறது. இரு நாடுகளும் இறக்குமதி வரியை உயர்த்தி வருகின்றன.

இதை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும், சீன ஜனாதிபதி ஜின்பிங்கும் கடந்த டிசெம்பரில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது இருநாட்டு பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை நடத்தி சுமுக தீர்வு காண்பது என முடிவு செய்யப்பட்டது. ஆனால், பேச்சுவார்த்தை மிகவும் மெதுவாக நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக வரியை அமெரிக்கா உயர்த்தி உள்ளது. இதன் மூலம் சீன பொருட்களுக்கு ரூ.14 ஆயிரம் கோடி இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் அறிவித்தார். சுமார் 20 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இந்த புதிய வரிவிதிப்பு முறை வரும் 10 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

இந்நிலையில், பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த சர்வதேச நிதியம் (ஐ.எம்.எப்.) அமைப்பின் தலைவர் கிறிஸ்ட்டைன் லகர்டே, 'அமெரிக்கா, சீனா இடையில் வரிவிதிப்பு தொடர்பாக அதிகரித்துவரும் மோதல் போக்கு உலக பொருளாதாரத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் எனத் தெரிவித்துள்ளார். (7)


## நமிபியாவில்...
## அவசர நிலை...

(வின்ட்ஹோக்)

தென்மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நமிபியாவில் கடுமையான பஞ்சம் நிலவுவதால் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அவசர நிலை சட்டம் அடுல்படுத்தப்பட்டுள்ளது.

தென்மேற்கு ஆபிரிக்க கண்டத்தில் உள்ள நமிபியா நாட்டில் சுமார் 25 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

தனிநபர் வருமானத்திலும் பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள நமிபியாவில் பருவமழை பொய்த்துப் போதும் காலங்களில் கடுமையான பஞ்சம் மற்றும் பசி, பட்...



...டினியால்... வாழ்விய...

அவ்வ... அளவில்... தேவையா... வதற்காக... ஜனாதிபதி...

# வெளிநாடு

## …ப்புச் சம்பவம் …க உயிரிழப்பு



…பர் படுகாயம்

…டேடா தர்பார் மசூதியை
…டிப்பு சம்பவமொன்றில்

…குறித்த பகுதியில் மீட்புப் பணிகள் நிறைவ…டைந்துள்ள நிலையில், தற்போது விசாரணைகள் …ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


இச்சம்பவத்திற்கு இதுவரை எந்தவொரு …அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்பது …குறிப்பிடத்தக்கது. (7)



# சிறைச்சாலைக்குள் துப்பாக்கிச்சூடு

## 7 பேர் உயிரிழப்பு; 20 பேர் படுகாயம்





(குவாத்தமாலா)

குவாத்தமாலா நகரில் உள்ள சிறைச்சாலையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 20 பேர் காயமடைந்துள்ள நிலையில், அவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வன்முறையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஏறக்குறைய ஆயிரத்து 500 படையினரும், பொலிஸாரும் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து சுமார் எட்டு மணிநேரம் வரை சிறைச்சாலைக்குள் நீடித்த வன்முறை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இரு கைதிகளுக்கு இடையில் ஏற்பட்ட மோதலே இந்த வன்முறையை தூண்டிவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1970களில் ஆயிரம் கைதிகளை சிறை வைக்கும் வகையில் அமைக்கப்பட்ட குறித்த சிறைச்சாலையில் தற்போது 4 ஆயிரம் சிறை கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.


குறித்த சிறைச்சாலையில் இதற்கு முன்னர் கடந்த 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரமொன்றில் 14 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## …கமூடி அணிந்த …கை வரிசை

…ஜனாதிபதி
…ல் திருடிய
…ளங்களில்

…வன் அமெ
…மூடியுடன்
…ாத்யைன்
…மூடியுடன்
…ணாடியை
…காரங்கள்
…டயில் சில
…ுள்ளதாக

…பொருத்தப்
…ல் பதிவா
…வெளியே
…நள் கீழே



விழவே அதை எடுக்க குனிந்த போதுமுகமூடி கீழே விழுந்தது.

இதனையடுத்து அந்த நபரை அடையாளம் கண்ட பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# அமெரிக்கப் பாடசாலையில் துப்பாக்கிச்சூடு! ஒருவர் பலி; எட்டு மாணவர்கள் படுகாயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் டென்வர் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒரு மாணவர் உயிரிழந்துள்ள நிலையில் 8 மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் கொலராடோவில் டென்வர் புறநகர்ப் பகுதியில் ஸ்டெம் ஸ்கூல் ஹைலேண்ட் ரான்ச் என்ற பாடசாலை உள்ளது. அப்பாடசாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு இந்தத் துப்பாக்கிச் சூடு நடை பெற்றது.




இதில் காயமடைந்த 8 மாணவர்களின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு பேர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். தகவல் அறிந்து விரைந்து வந்த பொலிஸார் அவர்களைப் கைது செய்துள்ளனர்.

இக்குறித்த பாடசாலையில் 1850 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## …ில் கடுமையான பஞ்சம்; …லைச்சட்டம் பிரகடனம்





…னியால் மக்கள் திண்டாடுவது தவிர்க்க முடியாத …வாழ்வியல் சூழலாக உள்ளது.

அவ்வகையில், இந்த ஆண்டும் போதிய …அளவில் பருவமழை பெய்யாததால் மக்களுக்கு …தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்…வதற்காக அவசரநிலை சட்டத்தை அந்நாட்டின் …னாதிபதி ஹகே ஜிய்ன்கோப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

நாடு முழுவதும் கால்நடைகள் மற்றும் வளர்ப்பு பிராணிகள் தொடர்பாக விரிவான கணக்கெடுப்பு நடத்துமாறும் அரச அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (7)

# நிலவில் கால் பதிக்கும் முதல் பெண் அமெரிக்கராகத்தான் இருப்பார்

## -மைக் பென்ஸ் நம்பிக்கை-

(வோஷிங்டன்)

நிலவில் கால் பதிக்கும் முதல் பெண், அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவராகத்தான் இருப்பார் என்று அந்நாட்டு துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் தெரிவித்தார்.

நிலவில் முதன்முதலாக கால் பதித்த மனிதர் என்ற பெருமைக்குரியவரான நீல் ஆம்ஸ்ட்ராங் அமெரிக்காவைச் சேர்ந்தவர் ஆவார்.

இந்த நிலையில், நிலவில் கால் பதிக்கும் முதல் பெண், அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவராகத்தான் இருப்பார் என்று



அந்நாட்டு துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தியா உள்ளிட்ட 105 நாடுகளைச் சேர்ந்த 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் பங்கேற்றுள்ள சட்டலைட் 2019 என்ற கருத்தரங்கு வோஷிங்டனில் ஆரம்பமாகியுள்ளது. இதில் கலந்துகொண்டு மைக் பென்ஸ் உரையாற்றும் போது,

"ஜனாதிபதி ட்ரம்பின் வழிகாட்டுதலின்பேரில், அடுத்த 5 ஆண்டுகளுக்குள் மீண்டும் மனிதர்களை நிலவுக்கு அனுப்பும் திட்டத்தை அமெரிக்கா முன்னெடுத்து வருகிறது. அந்த வகையில் நிலவில் கால் பதிக்கும் முதல் பெண் நிச்சயமாக அமெரிக்க நாட்டினராகத்தான் இருப்பார்" என்று தெரிவித்துள்ளார். (7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் 200 குழந்தைகள் தவிப்பு!

## செஞ்சிலுவைக் குழு அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் காரணமாக 200 குழந்தைகள் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த எவரையாவது இழந்து தவித்து வருகின்றன என இலங்கைச் செஞ்சிலுவைக் குழு தெரிவித்துள்ளது. இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பலர் குறிப்பிட்ட குடும்பங்களுக்கு வருமானத்தை ஈட்டித் தருபவர்களாகக் காணப்பட்டனர் எனவும் செஞ்சிலுவைக் குழு தெரிவித்துள்ளது.**

தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் காரணமாக சில குடும்பங்கள் திடீரென தங்கள் வாழ்வாதாரத்திற்கான வழியை இழந்துள்ளன எனத் தெரிவித்துள்ள செஞ்சிலுவைக் குழு இந்தக் குடும்பங்கள் மீண்டும் வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான போதிய சேமிப்போ பண வசதியோ அற்ற நிலையில் காணப்படலாம் எனவும் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல்கள் காரணமாக 500 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ள செஞ்சிலுவைக் குழு 75 குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

சிலர் காயங்கள் காரணமாக வேலைகளுக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளனர். சிலர் தாங்கள் வேலை பார்க்கும் திறனை இழந்துள்ளனர் எனவும் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள் குறித்து துரித ஆய்வை மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ள இலங்கைச் செஞ்சிலுவைக் குழு நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் முதலுதவியை வழங்க வேண்டிய தேவையுள்ளது கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

குறிப்பாக இந்தச் சம்பவங்களில் உயிர் தப்பியவர்கள், சம்பவங்களை நேரில் பார்த்தவர்கள் மற்றும் தங்கள் குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்களுக்கு இவ்வாறான உளவியல் முதலுதவி தேவைப்படுகின்றது எனவும் செஞ்சிலுவைக் குழு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து அவர்கள் புதிய சவால்களை எதிர்கொள்ளக் கூடும் எனவும் செஞ்சிலுவைக் குழு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## நான்கு மாதங்களில் 23 பேர் மரணம்!

# 'பயங்கரவாதத்தை ஒழிப்பது போலவே டெங்கு ஒழிப்பிலும் கவனம் செலுத்தவும்'

(கொழும்பு)

டெங்கு நோயால் இவ் வருடத்தின் கடந்த நான்கு மாதங்களில் 23 பேர் மரணமடைந்துள்ளதாகவும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் டெங்கு நோயத் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜெயசிங்க தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை ஒழிப்பது போலவே டெங்கு ஒழிப்பிலும் அதிக கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் டெங்கு நோயால் 58 பேர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை இவ் வருடத்தில் நான்கு மாதங்களில் 23 பேர் உயிரிழந்துள்ளனர். இது டெங்கு நோய் அதிகரிப்பையே காட்டுகின்றது.

நாட்டில் தற்போதைய சூழ்நிலை காரணமாக டெங்கு ஒழிப்பில் இராணுவத்தினரை ஈடுபடுத்த முடியாத நிலையுள்ளது. சிவில் அமைப்புக்களை அச் செயற்றிட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நிர்மாணப் பணிகள் இடம்பெறும் பகுதிகளிலேயே அதிகளவு டெங்கு நுளம்பு உற்பத்தி இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அது தொடர்பில் அறிவிக்கப்பட்டும் குறித்த நிர்மாண ஒப்பந்தகாரர்கள் அதனை அலட்சியம் செய்தால் நிர்மாணப் பணிகளை தற்காலிகமாக தடை செய்ய நேரிடும்.

அத்துடன் அத்தகைய நிறுவனங்கள் தொடர்பில் ஊடகங்கள் மூலம் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)


# காத்தான்குடியில் மர அரிவு ஆலை தீக்கிரை

(காத்தான்குடி)

காத்தான்குடி பகுதியிலுள்ள மர அரிவு ஆலையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 73 இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தீ விபத்து நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும் தீ பரவுவதை அவதானித்த அங்கிருந்தவர்கள் தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சித்தர்கள் சிந்தனை

சேர்! அங்கே என்ன ஒரு கூட்டம் என்று ஒருவர் கேட்டார்.

அதுவா? அந்த வீட்டில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் மூச்சு விட மறந்து விட்டாராம்! இது இன்னொருவருடைய வேடிக்கையான பதில். இவரும் ஒருநாள் அப்படி மறந்து விடப் போகின்றவர் தான். இருந்தாலும் இப்ப அதை நினைத்து அதற்காக கவலைப்பட்டுக் கொண்டிருக்க இவர் தயாராக இல்லை.

மூச்சு என்றால் அது சாதாரண விடயமா? அது போய் விட்டது என்றால் இந்த உலகத்தில் இனிமேல் அவருக்கு வேலை இல்லை என்றுதான் அர்த்தம்! மனித உடம்பில் மூச்சு எப்படி இயங்குகின்றது. உள்ளே போய் வருகின்ற காற்று இந்த உடம்பை எப்படி நடமாட்டத்தில் வைத்திருக்கின்றது? இது ஒரு தனி ஆராய்ச்சி. ஒரு கட்டத்தில் உயிர் உடம்பை விட்டுப் பிரிந்து விடுகின்றது.

இது சம்பந்தமான ஆராய்ச்சியிலே நிபுணர்கள் யார் தெரியுமா? சித்தர்கள். உடம்பினுள் இருக்கின்ற இரகசியங்களை அவர்களை விட பெரிதாக வேற யாரும் சொல்லவில்லை. மனித உடம்பினுள் 72,000 நாடி நரம்புகள் இருக்கின்றதாக சித்தர்கள் கணக்குச் சொல்கின்றார்கள். இதில் முக்கியமானது எத்தனை என்று கேட்டால் இருபத்து நான்கு!

அதுசரி! இந்த 24 இலே அப்படி என்ன விடயம்? இந்த 24 நாடி நரம்புகளும் மற்ற நரம்புகள் மாதிரி இல்லாமல் எப்பவும் தூக்கத்திலேயே இருக்குதாம்! இந்த 24 நாடி நரம்புகளில் 10 நாடிகள் மேல் நோக்கி இருக்கும். 10 நாடிகள் கீழ் நோக்கி இருக்கும். மீதி நான்கும் 4 பக்கத்திற்கு இரண்டு இரண்டாக பிரிந்து பாம்பு போல் சுற்றி வளைத்துக் கொண்டு கிடக்கின்றது.

இப்படிக் கிடக்கின்றதில் இதிலே தான் உயிரோடு ஜீவ ஆற்றல் அறிதுயில் செய்கின்றதாம். இந்த 24 நாடியிலேயும் 10 மிகவும் முக்கியம். அந்த 10 இல் 3 மிகவும் முக்கியம். இந்த மூன்றுக்குள்ளேதான் அந்த இரகசியமான உறக்கம் பொதிந்து கிடக்கின்றதாம்.

இந்த மூன்றும் எமது உயிரை உடம்போடு இணைத்துக் கொண்டு இயங்குகின்றதாம். இந்த நாடிகளோடு 3 வாயுக்களுக்கும் 3 பெயர் உண்டு. இடகலை, பிங்கலை, சுழுமுனை. சந்திரன்– சூரியன்–அக்கினி என்றும் இதை சொல்வதுண்டு. இடது நாசியிலே இழைகிற மூச்சு இடகலை. வலது நாசியிலே இயங்குகிற மூச்சு பிங்கலை.

சுழுமுனை என்பது 2 நாசியிலேயும் வந்து போய் இயங்குகின்ற சுவாசம். இந்த 3 மூச்சுக்களின் இயக்கத்தை பற்றி நம்முடைய சித்தர்கள் சொல்லியிருக்கின்ற இரகசியத்தை எல்லாம் வெளிநாட்டுக்காரர்கள் ஆராய்ச்சி செய்கின்றார்கள்.

சிறிது காலத்திற்கு முன்பு லெனின் கிராட் பல்கலைக்கழகத்திலிருந்து டாக்டர் மெஸ்ஸிங் என்பவர் இந்தியாவிற்கு வந்தார். அவர் ஒரு விஞ்ஞானப் பேராசிரியர். இமயமலைச்சாரலில் வந்து சிறிது காலம் தங்கினாராம்.

அங்கேயுள்ள சில யோகிகளிடம் பழகினார். self induced cataleptic state என்ற மூச்சு வித்தையைப் பற்றி தெரிந்து கொண்டு போனார். அவர் என்ன சொன்னார் தெரியுமா?

இந்தியாவில் இருக்கின்ற சித்தர்கள் பல வாரங்கள் மூச்சு விடாமல்– மரக்கட்டைபோல்– உயிர் இருந்தும் இல்லாதது போல் – ஒரு யோக சமாதி நிலையிலே இருக்கின்றார்கள். உன்னால் இப்பொழுது 3 நாட்கள் வரைக்கும் அப்படி இருக்க முடியுது. அதற்கு மேல் அப்படி இருப்பதற்கு ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கின்றேன் என்று கூறினார். இந்த 3 மூச்சுக்களைப் பற்றி சித்தர்கள் நூலில் இன்னும் சில இரகசியங்கள் இருக்கின்றதாம்.

வளர்பிறையிலே முதல் 3 நாட்கள்– அதாவது அமாவாசை கழித்து மறு நாளிலிருந்து 3 நாட்கள்– காலையிலே எந்த நாசி எப்படி இயங்கும் என்ற கணக்கை கண்டுபிடித்து கூறியிருக்கின்றார்கள். நான்காம் நாளிலிருந்து ஆறாம் நாள் முடிய இது மாறும். பின் ஏழாம் நாளில் இருந்து முதல் 3 நாட்கள் போல் மறுபடியும் இயங்கும். இப்படியே 3 நாட்களுக்கு இந்த இடகலையும்– பிங்கலையும் மாறி மாறி ஒரு சட்டதிட்டத்தின்படி வேலை செய்கின்றது.

இப்படி இருந்தால் அந்த உடம்பு ஆரோக்கியமாக இருக்கின்றது என்று அர்த்தம். இந்த இரண்டும் தவிர சுழுமுனை என்ற மூன்றாவது மூச்சு எப்படி இயங்குகின்றதற்கும் ஒரு வாய்ப்பாடு இருக்கின்றது. காலையிலே எழுந்ததும் மூச்சு எந்த நாசியிலே எப்படி இழைகின்றது என்பதை வைத்து சில விடயங்களை புரிந்து கொள்ள முடியும். உதாரணத்திற்கு ஒரு இரவு முழுவதும் நாசியிலே மூச்சு ஓடிக்கொண்டிருந்தால் அந்த உடம்பிற்கு 3 வருடத்திற்கு மேல் உயிராற்றல் இல்லை என்று முடிவு செய்யலாம்.

இரவு முழுவதும் இடகலையும்– பகல் முழுவதும் பிங்கலையும் மாறாமல் நடந்து கொண்டிருந்தரல் அந்த மனிதன் 6 மாதத்தில் மரணத்தை நெருங்குகின்றான் என்று அர்த்தம். 2 கண்களையும் அழுக்கினால் தண்ணீர் வர வேண்டும். வரவில்லை என்றால் இந்த உடம்புக்கு 10 நாட்களில் முடிவு வந்து விடும். ஆகாயத்தில் இருக்கின்ற நட்சத்திரம் பார்வைக்குத் தெரியவில்லை என்றால் 5 நாட்களில் மரணம். ஒருவர் அப்படித்தான் ஓடி வந்தார். சேர் எனக்க மூச்சு வித்தி யாசமாக ஓடிக்கொண்டு இருக்கின்றது பயமாக இருக்கின்றது என்றார். எப்படி... இடகலையா–பிங்கலையா– சுழிமுனையா என்று கேட்டேன்.

இது மூன்றும் இல்லை. அது நான்காவது டைப்பா இருக்கின்றது! வாய் வழியாக மூச்சு ஓடிக்கொண்டு இருக்கின்றது என்றான். கொஞ்சம் கவனித்து பார்த்ததற்கு பின் தான் விடயம் புரிந்தது அவருக்க கடுமையான ஜலதோசம். அது தான் மூக்கு அடைபட்டு போய் வாய் வழியாக சுவாசம் செய்து கொண்டிருக்கின்றார்.

# மனித உரிமைகள் மதிக்கப்படுவதை உறுதி செய்யவும்

## சர்வதேச மன்னிப்புச் சபை

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தொடர்குண்டுத் தாக்குதல்களையடுத்து பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் மேற்கொண்டுவரும் கடுமையான நடவடிக்கைகளை அடுத்துத் தோன்றியிருக்கும் சூழ்நிலைகளில் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தையும், தராதரங்களையும் உறுதிப்படுத்த வேண்டுமென்று இலங்கை அரசாங்கத்திடம் சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் மன்னிப்புச் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

குண்டுத்தாக்குதல்களையடுத்து 150 இற்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக உள்நாட்டுச் செய்திகள் மூலம் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இந்தக் கைதுகள் எந்தச் சட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது குறித்து தற்போது பொதுவெளியில் தகவல்கள் இல்லை.

இலங்கையின் பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்து நீண்டகாலமாகவே மன்னிப்புச்சபை விசனம் வெளியிட்டு வந்திருக்கிறது.

நீண்ட காலத்திற்கு ஆட்களைத் தடுத்து வைத்தல், சித்திரவதைக்கு உள்ளாக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் போன்றவற்றை அனுமதிக்கக்கூடிய கொடுமையான ஏற்பாடுகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் இருக்கின்றன.

குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்று மூன்று நாட்கள் கழித்து பொதுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் கீழ் அவசரகால நிலையும் பிரகடனப்படுத்தப்பட்டு,அதன் கீழான சட்டவிதிகளும் நடைமுறைக்கு வந்துள்ளன.

இந்த ஏற்பாடுகள் பல கடுமையான நடவடிக்கைகளுக்கு வழி வகுக்கக்கூடியவை. அவை துஷ்பிரயோகம் செய்யப்படுமானால் மனித உரிமை மீறல்களுக்கு ஒப்பானவையாக அமையும்.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டிருப்பவர்களை இலங்கை அரசாங்கம் விசாரணை செய்துவரும் நிலையில், தற்போதைய சூழ்நிலை நாட்டில் வெறுப்புணர்வையும், சமூகங்களின் மத்தியில் பிளவையும் தூண்டிவிடுவதற்குப் பயன்படுத்தப்படாதிருப்பதை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டுமென்று மன்னிப்புச்சபை கேட்டுக்கொண்டுள்ளது.

கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்போர் சித்திரவதை செய்யப்படாத வகையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொலிஸாருக்கும்பாதுகாப்புப் படையினருக்கும் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் பரந்தளவானவையாக இருப்பதால் அவை துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடிய ஆபத்துக்கள் இருப்பதை அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட மன்னிப்புச்சபை விரும்புகின்றது.

இயக்கங்களைத் தடை செய்வதற்கு ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்கள், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமை, அமைதியான முறையில் கூட்டங்களை நடத்துவதற்கான சுதந்திரம் போன்ற நியாயபூர்வமானதும், சட்டபூர்வமானதுமான மனித உரிமைச் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படுவதற்கு வழி வகுக்கக்கூடும்.

அவ்வாறு நடைபெறாமல் அரசாங்கம் அதன் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மன்னிப்புச்சபை கேட்டுக்கொள்கிறது.

அவசரகால விதிகளின் கீழான கடுமையான ஏற்பாடுகளைப் பட்டியலிட்டிருக்கும் மன்னிப்புச் சபை,அந்த விதிகளை மாற்றியமைக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வந்திருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தாக்குதல்களில் உயிரிழந்தோருக்கு யாழ்ப்பாணத்தில் நேற்று அஞ்சலி







(யாழ்ப்பாணம்)

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்த இலங்கை மக்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் யாழ்ப்பாணத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதில் சர்வமதத் தலைவர்கள், அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி கொழும்பு, மட்டக்களப்பு மற்றும் நீர்கொழும்பு உள்ளிட்ட இடங்களில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்காது ஒன்றுபடுவோம்

## முன்னாள் அமைச்சர் பைசர் அறிவுரை



(கொழும்பு)

நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். இடிபாடுகளுக்குள்ளான தேவாலயங்களையும் ஹோட்டல்களையும் புனரமைப்புச் செய்ய வேண்டும். மீண்டும் பயங்கரவாத அமைப்பு தலைத் தூக்குவதற்கு இடமளிக்காத வகையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது சமூகத்தின் குறிப்பிட்ட தொரு பிரிவினர் தற்கொலைக் குண்டுதாரிகளாக மாற்றம் பெருவார்களென்பது நாம் எந்தவொரு காலத்திலும் நினைத்துக்கூட பார்த்திராத விடயம். அவர்களை நாம் ஒரு காலமும் இஸ்லாமியர்களாக ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அதனால் தான் அவர்களது சடலங்களை இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்யவில்லை.

முஸ்லிம்கள் அனைவரும் பயங்கரவாதிகள் அல்ல. இச்சம்பவத்தால் உயிரிழந்தவர்களுக்கு எம்மால் ஆறுதல் கூற முடியாது. அவர்களின் வலிகளும் வேதனைகளும் அவர்களுக்கு மட்டுமே உரியது. குண்டு வெடிப்பால் உயிரிழந்தவர்களுக்கு எம்மால் ஆறுதல் கூற இயலாது. நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். இடிபாடுகளுக்குள்ளான தேவாலயங்களையும் ஹோட்டல்களையும் புனரமைப்புச் செய்ய வேண்டும். மீண்டும் பயங்கரவாத அமைப்பு தலைத்தூக்குவதற்கு இடமளிக்காத வகையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முதலமைச்சர் மீது மீண்டும் குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலர் நாளை வியட்நாமிற்கு சுற்றுலா செல்ல திட்டமிட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை ஜே.வி.பியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்யாரத்ன முன்வைத்துள்ளார்.

ஊவா மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் மின் விளக்குகள் செயற்றிட்டத்திற்காக அவர்கள் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விஜயத்திற்காக ஊவா மாகாண முதலமைச்சர், மாகாண சபையிடமிருந்து பணம் பெற்றுள்ளதாக சமன் வித்யாரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயகவிடம் கேட்ட போது இந்த விஜயத்திற்காக மாகாண சபையிடமிருந்து எந்தவொரு நிதியும் பெற்றுக் கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்தார். (இ-7)

# வெசாக் தினக் கொண்டாட்டங்கள் இம்முறை இரண்டு நாட்கள் - அரசு

(கொழும்பு)

5 நாட்கள் நடத்த திட்டமிடப்பட்டிருந்த தேசிய வெசாக் தின் நிகழ்வுகளை 2 நாட்களாக மட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

பௌத்த ஆலோசனை சபையில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமையவே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)



# பயங்கரவாதத்துடன் சம்பந்தப்படாதவர்களை விடுவிக்க முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கை

## அமைச்சர் ஹக்கீம் தலைமையில் ஆராய்வு


(கொழும்பு)

பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர் நாட்டில் தோன்றியுள்ள அசாதாரண சூழ்நிலையில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் உயர்மட்டக் கலந்துரையாடல் இராஜாங்க அமைச்சர், பாராளுன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர்பீட உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்று முன்தினம் கட்சித் தலைமையகமான தருஸ்ஸலாமில் இடம் பெற்றது.

தற்போது முஸ்லிம் மக்கள் மத்தியில் நடத்தப்படும் தேடுதல் நடவடிக்கைகளின்போது, பயங்கரவாதத்துடன் எந்த விதத்திலும் சம்பந்தப்படாத பலர் பாதுகாப்புத் தரப்பினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் கட்சியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

பாதுகாப்புத் தரப்பினரால் இஸ்லாமிய நூல்களுக்கும் பயங்கரவாதத்துக்கும் இடையிலான வேறுபாட்டை பிரித்தறிய முடியாமல், சந்தேகத்தின் பேரில் அப்பாவி மக்கள் கைதுசெய்யப்படுகின்றனர். அத்துடன் அன்றாட உபயோகப் பொருட்கள், இராணுவ சீருடைகளை ஒத்த உடைகள் மற்றும் இன்னோரன்ன காரணங்களால் பயங்கரவாதத்துடன் சம்பந்தப்படாதவர்கள் கைதாகின்றனர்.

கட்சியின் தலைவர், செயலாளர் மற்றும் சட்டத்தரணிகள் இணைந்து பிரதமர், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் மற்றும் சட்டம் ஒழு



ங்கு அமைச்சர் ஜனாதிபதி ஆகியோருக்கு இவ்விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தி, எதிர்காலத்தில் இவ்வாறான கைதுகள் விடயத்தில் பொறிமுறையொன்றை உருவாக்குவது குறித்து வலியுறுத்தப்படவுள்ளது.

அத்துடன் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்களின் விபரங்களை ஆராய்ந்து, சாதாரண குற்றங்களின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் வாதாடி, அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்ளவுள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கென கட்சியின் சட்டத்தரணிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

எனவே, எந்தவித பயங்கரவாத நடவடிக்கைகளுடனும் சம்பந்தப்படாமல் கைதுசெய்யப்பட்டு, பயங்கரவாத சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்களின் விபரங்களை பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள், கட்சி அமைப்பாளர்கள் ஊடாக கட்சித் தலைமையகத்துக்கு அவசரமாக அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதன்போது பொலிஸாரால் நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை கட்டாயம் இணைக்கப்படவேண்டும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இதற்கான தகவல் திரட்டுப் படிவத்தை உங்களது பிரதேசங்களிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளரிடம் பெற்றுக்கொள்ள முடியும். அமைப்பாளர்கள் பற்றிய விபரங்கள் தேவைப்பட்டால் கட்சித் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், முஸ்லிம் கலாசார ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது. முகம் தெரியக்கூடிய வகையில் பெண்கள் அணியும் ஹிஜாப், அபாயா தொடர்பில் அரச நிறுவனங்களின் மேற்கொள்ளப்பட்டும் கடும்போக்கு குறித்தும் கவனத்திற் கொள்ளப்பட்டது. இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் பேசித் முடிவெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. (இ-7)

---

## சரத் என்.சில்வாவுக்கு எதிரான மனு ஒத்திவைப்பு



(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு எதிரான மனுவை விசாரிப்பதில் இருந்து ஒரு நீதியரசர் விலகியதன் காரணமாக மனு ஜூன் மாதம் 28ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு நேற்று நீதியரசர்களான பிரசன்ன ஜெயவர்தன, முர்து பெர்னாண்டோ மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது இந்த மனுவை விசாரிப்பதில் இருந்து தான் விலகுவதாக நீதியரசர் பிரசன்ன ஜெயவர்த்தன திறந்த நீதிமன்றில் அறிவித்தார்.

இதனையடுத்து மனு எதிர்வரும் ஜூன் மாதம் 28ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் 3ஆம் திகதி மருதானையில் நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் உரையாற்றிய முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா நீதிமன்றத்தை அவமதித்து கருத்து வெளியிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதியும் அவர் இதுபோன்று நீதிமன்றத்தை அவமதித்து கருத்து வெளியிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

---

### யாழ்.பல்கலை. மாணவர்கள் கைது ஊடாக

# இஸ்லாமிய பயங்கரவாதத்தை அரசு திசை திருப்புகின்றதா?

## பிரபா கணேசன் சந்தேகம்

இஸ்லாமிய பயங்கரவாதம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் இத் தருணத்தில் சோதனை என்ற பெயரில் யாழ்.பல்கலைக் கழக மாணவர்களின் கைது நடந்த குண்டுத் தாக்குதல் சம்பவங்களை மறைக்கடிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப இடம் பெறுகின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் 2009 ஆம் ஆண்டு யுத்தத்திற்குப் பின்னர் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஜனநாயக ரீதியிலே இடம்பெற்று வருகின்றது. இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் இஸ்லாமிய பயங்கரவாதத்தை அடிப்படையாக வைத்தே இடம் பெற்றுள்ளது. இத் தருணத்தில் சோதனைகள் என்ற போர்வையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் கைது மீண்டும் தமிழர்களுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சி முயற்சி எடுப்பதாகவே தோன்றுகின்றது. முஸ்லிம் மக்களின் வாக்குகளை தக்கவைத்துக் கொள்வதற்காக இஸ்லாமிய பயங்கரவாதத்தை மூடி மறைக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சி செய்வதாக தோற்றமளிக்கின்றது.

அவரின் அமைச்சரவையில் இருக்கும் அமைச்சர் றிசாத் பதியுதீன் சம்பந்தமாக பாரிய குற்றங்களை ஊடகங்கள் முன்வைத்திருந்தும் அவருக்கு எதிரான எவ்விதமான நடவடிக்கையும் ரணில் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என்பதை பார்



க்கும் பொழுது வேடிக்கையாக இருக்கின்றது.

அதே போல் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா விடயத்தில் பல பயங்கரவாத குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டும் ஜனாதிபதி எவ்வித நடவடிக்கையும் எடுக்காததை பார்க்கும் பொழுது கவலையளிக்கின்றது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு முஸ்லிம் சிறுபான்மை வாக்குகளை குறிவைத்து ஜனாதிபதியும் பிரதமரும் செயற்படுகின்றார்களா? என்ற சந்தேகம் எழுகின்றது. அமைச்சர் றிசாட் பதியுதீனோ அல்லது ஆளுநர் ஹிஸ்புல்லாவோ இஸ்லாமிய பயங்கரவாதிகள் என நான் குறிப்பிடவில்லை. மாறாக இப் பயங்கரவாதத்திற்கு இவர்கள் துணைபோயுள்ளார்களா? என விசாரணை செய்ய வேண்டிய கடமை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் உள்ளது என இந் நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

இத் தருணத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு சட்டமும் ஒழுங்கும் அமைச்சை வழங்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கையெழுத்துவேட்டையை ஆரம்பித்திருப்பது அனைத்து சம்பவங்களையும் திசை திருப்ப முயற்சிப்பதாகும். நான் இரண்டு வருடங்களுக்கு முன்பே ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்படாவிட்டால் இந் நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம் உட்பட அனைத்து விடயங்களும் கேள்விக்குறியாகிவிடும் என எச்சரிக்கை விடுத்திருந்தேன். அது இன்று உண்மையாக்கப்பட்டுள்ளது. சரத் பொன்சேகா போன்று அரசியல் அனுபவமற்ற நபருக்கு சட்டமும் ஒழுங்கை கையளிக்க வேண்டுமென சிறுபான்மை மக்கள் நினைப்பார்களேயாயின் அதைவிட கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதில் எந்த தவறும் இல்லை என்று நினைக்கத் தோன்றுகின்றது.


அதே நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தமது ஊடக அறிக்கையிலே ஒற்றுமை இன்மையினால் தான் இலக்கை அடைய முடியாதுள்ளது எனத் தெரிவித்துள்ளார். ஆனால் 2000 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை நம்பித்தான் தமிழ் மக்கள் அவர்களுக்கு வாக்களித்தார்கள்.

இருப்பினும் அதன் ஊடாக எந்த இலக்கினையும் இவர்களால் அடைய முடியாதுள்ளதை இவர் மறந்துவிட்டார் என நினைக்கின்றேன். ஆகவே ஒற்றுமை என்பது இயலாதவர்களின் ஒற்றுமையாக இருக்க முடியாது. ஒற்றுமை என்பது முக்கியமல்ல. மாறாக மக்கள் சேவையும் நேர்மையான எண்ணங்களுமே எமது மக்களின் தேவையான இலக்கினை அடைய முடியும் என இவருக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

---

# பிரச்சினைகள் அனைத்தும் தீர வேண்டும்!

### நஸீர் அஹமட்



“பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து நாட்டில் ஐக்கியமும் சமாதானமும் நிலைத்தோங்க புனித ரம்ழானை வரவேற்று தொடர்ந்தும் பிரார்த்தனைகளில் ஈடுபடுவோம்” என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

புனித ரமழான் ஆரம்பமானதை முன்னிட்டு அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“என்றுமில்லாதவாறு மிகவும் இக்கட்டான-நெருக்கடியான நிலைமைகளுக்கு மத்தியில் இம்முறை நமது மக்கள் புனித ரம்ழான் நோன்பைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பு, இன, மத ஐக்கியம், சாந்தி, சமாதானம் மற்றும் சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வு என்பனவற்றை கருத்திற்கொண்டு முஸ்லிம் மக்கள் சகிப்புத் தன்மையுடன் இம்முறை புனித நோன்பை கடைப்பிடிக்க திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

எமது பிரார்த்தனைகள் நாட்டில் புரையோடிப்போயுள்ள நம்பிக்கையின்மைகளைத் தகர்த்து நல்லுறவுகளை வளர்க்கவும் சந்தேகங்களைப் போக்கி புரிதல் - சௌபாக்கியங்களை உருவாக்கவும் வழிகோல வேண்டும்.

காலம் தற்போது நமக்கொரு நெருக்குதலை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனூடாக வேதனைகளும், சோதனைகளும் நம்மை ஆட்கொள்ளலாம். இவற்றை எல்லாம் நாம் எமது தொழுகைகளின் மூலமாகவே முறியடித்து வெற்றி கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

நிகழ்வுகள் இவ்வாறு மாறியபோது கரையோரச் சிங்களவர் மேல்மாகாணத்தில் தமிழருக்கென ஓர் ஆசனத்தை ஒதுக்குவதாக 1918 இல் தாம் அளித்த வாக்குறுதிகளை, ஆதரிக்க விருப்பமின்மையைக் காட்ட ஆரம்பித்தனர்.

1921 இந்து சாதனத்தில் அதன் ஆசிரியர் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையில் பிளவு என்ற தலைப்பின் கீழ் மேல் மாகாணத்தில் தமிழருக்கு ஓர் ஆசனத்தை ஒதுக்கச் சிங்களத் தலைவர்கள் முற்றுமுழுதாக மறுத்துவிட்டனர் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றார்.


1918 டிசெம்பரில் தமிழரின் விடுதலைக்காக அவர்களுடன் இணைந்து உதவுவதாகச் சிங்களத் தலைவர்கள் உறுதி மொழி அளித்திருந்தனர். இரு பகுதியினருமே கடந்த சில வருடங்களாக ஒருமித்துச் செயற்பட்டுள்ளனர். இப் போது இந்த ஒற்றுமை உடைகின்ற அபாயம் ஏற்பட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் நடத்தப்பட்ட தேசியக் காங்கிரஸ் கூட்டத்தில் மேல் மாகாணத்துத் தமிழர் பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டி அரசாங்கத்தைக் கோர வேண்டும் எனச் சில தமிழ்க் கனவான்கள் கூறியபோது அநேகமான சிங்களத் தலைவர்கள் இதற்கு மறுத்துவிட்டனர்.

இச்செயல் தமிழர் மத்தியில் பெரும் மனவருத்தத்தையும் சிங்களவருக்கு எதிரான கடும் பகைமையையும் ஏற்படுத்தியுள்ளது. சிங்களவர் இந்த வகையிலே தமது வாக்குறுதிகளை மீறுவர் என எவரும் கற்பனை செய்ததில்லை.

1921 ஒகஸ்ட் 20 ஆம் திகதி மோனிங்ஸ்ராரும் இப் பிரச்சினையை எழுப்பியது. மேல் மாகாணத்தில் தமிழருக்கு ஓர் ஆசனம் ஒதுக்கப்படும் என முன்பு சிங்களத் தலைவர்கள் தமிழ்த் தலைவர்களுக்குஅளித்த வாக் குறுதி சில நாட்களுக்கு முன் நடந்த இலங்கைத் தேசியக் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் மீறப்பட்டுள்ளது.

மாறுகின்ற காலத்தையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் அனுசரித்தே மாற்றங்கள் செய்யப்படவேண்டுமாதலின் முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தங்களை நிறைவேற்ற



THE MORNING STAR. 242

XXIII—NO. 38. WILMINGTON, N. C., SUNDAY, NOVEMBER 15, 1908. WHOLE NO. 12,842.

NORFOLK & SOUTHERN

ARTILLERY SERVICE

GRIDIRON RESULT

THE NEW WOOLVIN BUILDING.

GAME PLAYED ON MONDAY

DISTRICT MEETING ENDS

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

வேண்டிய அவசியம் இல்லை யென ஒரு தலைவர் அறிவித்துள்ளார்.

எனவே சிங்களத் தலைவர்கள் தமது வாக்குறுதிகளை மீறி தேசாதிபதி தனது சொந்த நிகழ்ச்சி நிரலை நடைமுறைப் படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கினர் என்பது இப் போது தெளிவாகின்றது.

இதைத் தொடர்ந்து மனிங் 1921 இல் இனரீதி, பிரதேசவாரி இரண்டுமே கலந்த தொகுதிகளை அடிப்படையாகக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட தேர்தல் முறைமை ஒன்றைக் கொண்டு வரும் திருத்தங்களை அறிமுகப் படுத்தினார்.

இம்மாற்றம் சட்ட நிருபண சபையில் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களாக நான்கு சிங்களவரையும் ஒரு தமிழரையும் மேலும் மூன்று ஐரோப்பியர், இரண்டு பறங்கியர், ஒரு இந்தியர், இரண்டு முஸ்லிம் ஆகியோரை உள்ளடக்கிய சீர்திருத்தப்பட்ட சட்ட நிருபண சபையாக இருந்தது.

நாம் முன்பு கூறியுள்ளது போன்று சிங்களவரும் தமிழரும் அதிகளவிலான பிரதிநிதித்துவச் சமநிலை பெற்றிருந்த பழைய சட்ட நிருபண சபையுடன் ஒப்பிடுகையில் இது தமிழருக்குச் சாதகமற்றதாகவே காணப்பட்டது.

இந்து ஒகனும் இந்த நிகழ்ச்சிகளையிட்டு தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளமை சிங்களத் தலைவர்களினால் ஒருகாலம் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும் உறுதி மொழிகளும் வெறும் மாயையே என்பது வெளிப்படையான உண்மை என்பதனைக் காட்டுகின்றது.

இங்கு பணயமாக இருந்த பிரதான அரசியல் பிரச்சினை மேல் மாகாணத் தமிழருக்கு ஒரு விசேட ஆசனத்தை ஒதுக்குவதும் அதற்கான ஒப்புதலுமேயாகும். ஆனால் சிங்களவர் தமது வாக்குறுதிகளைக் கைவிட்டு மேல் மாகாணத்தைக் கைப்பற்றிக் கொண்டனர்.

நாட்டின் அரசியல் வரலாற்றில் இதுவரை சந்தித்திராத தீவிரமான விடயமாக, இந்த நிகழ்வுகள் சிங்களவருக்கும் தமிழருக்குமிடையில் ஆழமானதோர் பிளவை ஏற்படுத்தியவையாக இருந்தது.

தொடர்ந்து ஏற்பட்ட பல ஏதுநிலைகள் இந்தக் கருத்துக்கு வலுவூட்டுகின்றன. முதலில் பொ. அருணாசலமும் அவரது சகாக்களும் இலங்கைக்கு தேசியக் காங்கிரஸிலிருந்து நிரந்தரமாகப் பதவி விலகினர்.

இரண்டாவதாக தமிழ் இனத்தின் அரசியல் போராட்டத்திற்கு மேலும் சிறந்த சேவையை ஆற்றுவதற்காக அவர்கள் தமிழ் மகாஜன சபை என்ற புதிய அரசியல் இயக்கத்தை உருவாக்கினர்.

இந்த இரு நிகழ்வுகளும் இலங்கைத் தேசிய வாதத்திற்கும் சிங்கள தமிழ் ஒற்றுமைக்கும் தன்னை அர்ப்பணிப்பதாக எண்ணப்பட்ட இலங்கைத் தேசியக் காங்கிரசுக்கு மட்டும் ஒரு மரண அடியாக நிற்காது தமிழரையும் சிங்களவரையும் நிரந்தரமாகவே பிரித்து இறுதியில் இலங்கைத் தேசிய வாதத்திற்கே அழிவைக் கொண்டு வரக்கூடிய மரண அடியாக இருந்தது.

எனவே, சிங்களவரும் தமிழரும் ஒன்றுபட்டுத் திட்டமிட்டு உருவாக்கியது எதுவோ, அது இப்போது சிதைந்து அழிந்து இறுதியாக பிரிவினைப் பாங்கிலமைத்த வெவ்வேறான தமிழ், சிங்கள தேசிய வாத இயக்கங்கள் எழுந்தன. அருணாசலம் இந்த அதி முக்கிய நிகழ்வின் தாக்கத்தை பின்வருமாறு சித்திரிக்கின்றார்.

(தொடரும்)

# சிங்கப்பூருக்கு கடத்த முற்பட்ட 180 அரிய வகை சங்குகள் பறிமுதல்



(சென்னை)

சென்னை விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூருக்கு கடத்த முயன்ற 180 அரிய வகை சங்குகள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக, 6 பேரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

'சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து வெளிநாட்டுக்கு அரிய வகை கடல் பொருட்கள் கடத்தப்படுகிறது' என மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, அதிகாரிகள் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, சென்னையைச் சேர்ந்த 6 பேர் குழுவாக சிங்கப்பூர் செல்ல வந்திருந்தனர். இவர்கள் மீது சந்தேகம் அடைந்த அதிகாரிகள் 6 பேரையும் நிறுத்தி விசாரித்தனர். அவர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பேசவே அவர்களின் உடைமைகளைச் சோதனை செய்தனர். அப்போது, அரிய வகையான பச்சை நிற சங்குகள் மறைத்து வைக்கப்பட்டு இருந்ததை கண்டு பிடித்தனர்.

அந்தமான் நிகோபார் தீவுகளில் காணப்படும் இந்த அரிய வகை பச்சை நிற சங்குகளில் ஒன்று மட்டும் சிங்கப்பூரில் 50 டொலர் வரை விலை போகும் என்று கூறப்படுகிறது.

இதையடுத்து 6 பேரிடம் இருந்த 180 சங்குகள் பறிமுதல் செய்யப்பட் டன. இது தொடர்பாக 6 பேரிடமும் மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ-7)

# பேருவளையில் 20 வாள்கள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(பேருவளை)

பொலிஸ் தலைமையகம் வழங்கிய கால எல்லைக்கு அமைவாக பேருவளை பகுதியில் மாத்திரம் 20 வாள்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த தினங்களில் பொலிஸாரின் அறிவிப்புக்கமையவே இவ்வாறு வாள்கள் பொலிஸாரிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் சோதனை நடவடிக்கைகளுக்கமைய சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் குறித்து பொலிஸார் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வந்தனர்.

அதற்கமைய பொலிஸார் கடந்த சனிக்கிழமை தொடக்கம் நேற்று நள்ளிரவு வரையான காலப்பகுதில் இவ்வாறு சட்டவிரோதமாக வைத்திருக்கும் ஆயுதங்களை அருகிலிருக்கும் பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு விசேட அறிவிப்பை விடுத்திருந்தனர்.

அதற்கமையவே பேருவளை பகுதியில் இவ்வாறு 20 வாள்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்பு என பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரொருவர் குறித்த பகுதியில் 50 வாள்களை எடுத்துச் சென்று சிலரிடம் கொடுத்து மறைத்து வைத்துள்ளதாக தெரிவித்திருந்தார்.

இதன்போது குறித்த பகுதியில் சோதனைகளை மேற்கொண்டு பொலிஸார் 16 வாள்களை கைப்பற்றியிருந்தனர். தற்போது 20 வாள்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையிலே இந்தப் பகுதியில் மாத்திரம் 36 வாள்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)





சுவிஸ் நாட்டில் வசிக்கும் பத்மநாதன் ஜெயதாஸ் தனது 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, கடந்த 4 ஆம் திகதி கைதடி நுணாவில் ரயர் தொழிற்சாலையில் தற்காலிகமாக வசித்து வரும் குடும்பங்களைச் சேர்ந்த 18 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளை வழங்கினார். கைதடி உதவும் கரங்கள் அமைப்பின் ஊடாக இந்த துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

# 41 மீனவர்கள் கடற்படையால் கைது

(திருமலை)

திருகோணமலை கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் 41 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கடற்படையினரின் ஒரு குழு நேற்று முன்தினம் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின் போதே, தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட இந்த 41 பேரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 18 தொடக்கம் 60 வயதுக்குட்பட்டவர்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1715

Search for people, places and things


## கவிசனா

மலச்சிக்கலும் மனச்சிக்கலும் இல்லாம இருந்தா உடம்பு நல்லா இருக்கிறதா அர்த்தம்




## துவாரகி

என்னதான் இரண்டு காது இருந்தாலும் நாம ஒன்னுன்னு சொன்னா ஒன்னுன்னுதான் கேட்கும்



## பிரவீன்

இது இல்லாம ஒரு நிமிசம் கூட வாழமுடியாதுன்னு கதற வைக்கனும், அடுத்த நொடியே இதில்லாம ஒரு நிமிசம் கூட வாழமுடியாதுன்னு பதற வைக்கனும் அதுதான் மீன்குழம்பு



## ராஜ்

உண்மையில் இருப்பது

பெண்கள் கண்ணுக்குத் தெரிவது




## அபிசா

தின்னிப் பயலை பள்ளியில சேர்த்தது தப்பா போச்சு! ஏன்? அவுஸ்திரேலியாவின் தலைநகரம் என்னன்னு கேட்டா சட்னின்னு சொல்றான்



## சுவாத்தி


ரெண்டே வாரத்தில இவருடைய வோட்ச் தொலைஞ்சிடுச்சு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## மக்களின் பாதுகாப்புக்காக

# எந்தத் தியாகத்தையும் செய்யத் தயார்!



### பசில் ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

மக்களின் பாதுகாப்புக்காக எந்தவொரு தியாகத்தையும் செய்வதற்கு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராக இருக்கின்றது என அதன் தவிசாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் தமது தரப்பு. ஒருபோதும் அரசியல் செய்யாது எனவும் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

# ஐ.எஸ்ஸின் பெயரை பாராளுமன்றில் உச்சரிக்காமைக்கான காரணத்தை வெளியிட்ட ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் பெயரை உச்சரிக்காது உரையாற்றியிருந்தார்.

நேற்று முன்தினம் கூடிய பாராளுமன்றத்தில், கடந்த 21 ஆம் திகதி பயங்கரவாத தாக்குதலையடுத்து சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த சபை ஒத்திவைப்புவேளை விவாதம் இடம்பெற்றது. இதில் உரையாற்றிய ஜனாதிபதி குறித்த பயங்கரவாத அமைப்பின் பெயரைக் குறிப்பிடவில்லை.

அதற்கான காரணத்தை அவர் குறிப்பிடுகையில், சர்வதேச பயங்கரவாதம் குறித்து நான் படித்துத் தெரிந்த காரணிகள் உள்ளன. கடந்த 10 நாட்களில் இவற்றை நான் படித்து அறிந்து கொண்டேன்.

இந்த நான்கு எழுத்து பயங்கரவாதத்தை நாம் பாவிப்பது அவர்களை நாம் அங்கீகரிப்பதைப் போன்று ஆகிவிடும். சர்வதேச தலைவர்கள் எவரும் இதனை அங்கீகரிக்கவில்லை. நானும் அதனையே கையாள்கின்றேன் என்றார்.

மேலும், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா இந்த விடயம் தொடர்பில் குறிப்பிட்டிருந்தார்.

இவர்களது பெயரை குறிப்பிடுவது அவர்களை அங்கீ கரிப்பதாக அமையும். இரண்டு எழுத்துக்களையோ நான்கு எழுத்துக்களையோ நான் பயன்படுத்தப் போவதில்லை. அவ்வாறு பயன்படுத்தினால் இந்தப் பயங்கரவாதிகளை நாம் அங்கீகரித்ததாகிவிடும்.



எனவேதான், எனது பேச்சில் அவர்களது பெயரை நான் உச்சரிக்கவில்லை என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7)

# அச்சத்திற்கு மத்தியில் சாய்ந்தமருது மக்கள்!

(சாய்ந்தமருது)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு 5 நாட்களுக்குள் கிழக்கில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் இயல்பு நிலையைக் குலைத்துவிட்டது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை தொடர்ந்து சுற்றிவளைப்பு தேடுதலில், அம்பாறை சாய்ந்தமருது பகுதியில் மற்றுமொரு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. பொலிஸாரிடமிருந்து தப்பிப்பதற்காக தப்பிச்சென்ற பயங்கரவாதிகள் சாய்ந்தமருது - வெலிவேரியன் சுனாமி வீட்டுத்திட்ட பகுதியில் குண்டை வெடிக்கச் செய்தனர். இதில் 4 பயங்கரவாதிகள் உள்ளடங்கலாக அப்பாவிப்பொதுமக்களும் சேர்ந்து 15 பேர் உயிரிழந்தனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோர மக்களுக்காக கடந்த 2010 ஆம் ஆண்டு 'சுனாமி வீட்டுத்திட்டம்' என்ற பெயரில் இக்கிராமம் உருவாக்கப்பட்டது.

கடற்றொழில், விவசாயம் என்பவற்றை பிரதான தொழிலாகக் கொண்டு வாழும் இம் மக்கள், வறுமைக் கோட்டின் கீழேயே வாழ்கின்றனர். இவ்வாறு 460 குடும்பங்கள் இக் கிராமத்தில் வாழ்கின்றன.

பகலில் தமது சொந்த வீட்டிலும், இரவில் உறவினர்கள் மற்றும் அயலவர்களின் வீடுகளிலும் வாழும் நிலை இம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கை இதுவரை எதிர்கொண்டிராத ஒரு பயங்கரவாத நெருக்கடி மக்களை பீதியின் உச்சத்தில் கொண்டு சென்றுள்ளதை இம்மக்களின் அவல வாழ்க்கை எடுத்துக் காட்டியுள்ளது. (இ-7)

# சமுத்ரா கப்பல் சிங்கப்பூர் பயணம்







(திருகோணமலை)

சர்வதேச கடல்சார் பாதுகாப்பு கண்காட்சியில் பங்கேற்பதற்காக சமுத்ரா கப்பல் சிங்கப்பூர் நோக்கி திருகோணமலை துறைமுகத்திலிருந்து பயணமானது.

இதில் கடற்படை அதிகாரிகள் 17 பேர் உள்ளடங்கலாக 154 பேருடன் கடற்படையினர் சென்றுள்ளனர்.

33 நாடுகளின் கடற்படை பங்குபற்றவுள்ள சர்வதேச கடல்சார் பாதுகாப்பு கண்காட்சி இம்மாதம் 12 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. 17 ஆம் திகதி சமுத்ரா கப்பல் மீண்டும் நாட்டுக்கு திரும்பும் என கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

# செய்தித்துளிகள்

## ஆழமான குழிக்குள் விழுந்த 2 யானைக் குட்டிகள் மீட்பு

ஆழமான குழிக்குள் விழுந்த இரண்டு யானைக் குட்டிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளன. கல்கிரியகம பகுதியில் ஆழமான குழிக்குள் இரண்டு யானைக்குட்டிகள் கடந்த திங்களன்று தவறி விழுந்து குழிக்குள் இருந்து மேலே வருவதற்கு வழி தெரியாமல் திணறிக் கொண்டிருந்தன.

இந்நிலையில் வனவிலங்குத் துறை அதிகாரிகள் நான்கு மணி நேரம் குழியைத் தோண்டி யானைக்குட்டிகளை மீட்டு அவற்றின் தாயுடன் சேர்த்து வைத்தனர். (இ-7)

## வீதியை விட்டு விலகிய பேருந்து 23 பேர் வைத்தியசாலையில்

(பலாங்கொடை)

ஆடைச் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் பணியாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த பணியாளர்கள் 23 பேர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை, பலாங்கொடை-ராசகல வீதியில் பயணித்த குறித்த பேருந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்த 23 பேரும் உடனடியாக பலாங்கொடை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அனுமதிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## புத்தர் சிலை உடைப்புடன் தொடர்புடையவரின் வீட்டில் பாதுகாப்புப் பிரிவினர் சோதனை

### 5 வாள்கள், 2 கத்திகள் மீட்பு

(மாவனெல்ல)

மாவனெல்ல பகுதியில் புத்தர் சிலைக்கு சேதமேற்படுத்திய விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த சந்தேகநபரின் களுகமுவ பிரதேசத்தில் அமைந்துள்ள வீடு மற்றும் மகாவலி கங்கைக்கருகில் நேற்றுக் காலை பாதுகாப்புப் பிரிவினர் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

பேராதனை பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து குறித்த சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

அத்துடன் கடற்படையினரின் உதவியுடன் மகாவலி கங்கையில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன் போது 5 வாள்கள், 2 கத்திகள் என்பன மீட்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 80 | 120 |
| தக்காளி | 100 | 120 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 140 | 120 | 80 |
| கோவா | 80 | 80 | 55 | 100 |
| கரட் | 80 | 100 | 80 | 140 |
| பூசனி | 50 | 40 | 30 | 50 |
| புடோல் | 80 | 30 | 50 | 80 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 80-150 | 110 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 180 | 160 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 300 | 80 |
| லீக்ஸ் | 80 | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 120 | 100 | 50 | 100 |
| கறிமிளகாய் | 120 | 100 | 90 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 80 | 80 | 120 |
| போஞ்சி | 200 | 280 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 60 | — | 60 | 80 |
| கீரை-1பிடி | 40 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 300 | 280 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-50 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 150 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 200 | 240 | 250 | — |
| முள்ளங்கி | 80 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 30 | 10 | 20 |
| ஈரப்பலா | — | — | 100 | — |




# அறிவழகியின் அறிவுக்கூர்மை



சோலையூர் என்ற செழிப்பான ஊர், அங்கே அருகில் இருந்த மலையில் இருந்து ஓடிய சிற்றாறு உதவியால் மக்கள் விவசாயம் செய்து பிழைத்து வந்தார்கள். அதே ஊரில் விரைவில் பணம் சம்பாதிக்க நினைத்த சிலர், காட்டில் இருந்த மரங்களை தொடர்ந்து வெட்டியதால் சில ஆண்டுகளில் மழை பெய்யவே இல்லை. அதனால் சிற்றாறு வரண்டு போய் விட்டது. விவசாயம் செய்தவர்கள் எல்லாம் கஷ்டப்படத் தொடங்கினார்கள். மக்கள் பிழைப்புத் தேடி வெளியூர்களுக்குச் செல்லத் தொடங்கினார்கள்.

அதே ஊரில் அறிவழகி என்ற பெண் இருந்தார். அவருக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. அவரது கணவர் ஊரில் விவசாயம் செய்ய முடியவில்லை, எனவே இருக்கும் பணத்தைக் கொண்டு வணிகம் செய்வதாகக் கூறி வெளியூர் சென்றிருந்தார்.

பல நாட்களுக்குப் பிறகு அறிவழகிக்கு அவரது கணவரிடமிருந்து கடிதம் வந்தது. நீயும் குழந்தைகளும் இங்கு வந்து சேருங்கள். நாம் வளமாக வாழலாம் என்று அதில் எழுதியிருந்தது.

உடனே அறிவழகி தன் வீட்டை பூட்டி அயல் வீட்டாரிடம் சாவியைக் கொடுத்து விட்டு, வெளியூரில் வசிக்கும் கணவன் அழைத்திருப்பதாகவும் அங்கே செல்வதாகவும், பணம் நிறைய சம்பாதித்ததும் மீண்டும் சோலையூர் வருவோம் என்று சொல்லி விட்டு, குழந்தைகளுடன் வியாபாரத்திற்காக வெளியூர் செல்லும் வணிகர்களின் ஒரு மாட்டு வண்டியில் ஏறினார்.

அடர்ந்த காட்டில் இரவு நேரத்தில் தங்கி காலையில் செல்லலாம் என்று முடிவு செய்தார்கள். விடியற்காலையில் குழந்தைகள் அழ, அறிவழகி தன் குழந்தைகளுக்கு அங்கே இருந்த குரங்குக்கூட்டத்தை வேடிக்கை காட்ட, குரங்குகள் அங்கேயும் இங்கேயும் ஓட, அவரும் அவற்றை தொடர்ந்து போய் விட்டார். அதற்குள் புறப்படத் தயாராகி, அறிவழகியை வியாபாரிகள் மறந்து போய் காட்டிலேயே விட்டு விட்டுச் சென்று விட்டார்கள்.

குழந்தைகள் விளையாடி மகிழ்ந்த பின்னர் அமைதியாகிவிட, அறிவழகி, இரவில் தங்கிய இடத்திற்கு வந்தார், அங்கே யாரையும் காணவில்லை, எல்லோரும் சென்று விட்டார்கள்.

ஐயோ! என்ன செய்வேன்? நடுக்காட்டில் குழந்தைகளுடன் சிக்கிக் கொண்டேனே! இங்கே புலி பலரை அடித்துக் கொன்றதாகக் கேள்விப்பட்டுள்ளேனே என்று நடுங்கினார் அவர். சிறிது நேரம் யோசித்த அவர், பின்னர் அருகிலிருந்த மரத்தின் கிளையில் குழந்தைகளுடன் அமர்ந்தார். எப்படியும் இன்று மாலையில் மீண்டும் ஒரு வியாபாரிகள் கூட்டம் வெளியூர் செல்லும், அல்லது வெளியூர் கூட்டம் வரும், அவர்களோடு சென்று விடலாம். அதுவரை இந்த மரத்தின் மேல் இருப்பது தான் கொடிய மிருகங்களிடமிருந்து தப்பிக்க வழி என்று நினைத்தார்.

சிறிது நேரத்தில் மனித வாசனையை அறிந்த பயங்கரமான புலி ஒன்று அவர்கள் ஏறி இருந்த மரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த அறிவழகி அதனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தார். எப்படியும் அந்த புலியிடமிருந்து தப்பிக்க வேண்டும், அதற்கு அறிவை உபயோகித்தால் தான் முடியும் என்று யோசித்ததில் நல்ல வழி ஒன்று அவருக்குத் தோன்றியது.

இரண்டு குழந்தைகளின் தொடையிலும் அழுத்திக் கிள்ளினார். இருவரும் காடே அலறும்படி அழத் தொடங்கினார்கள்.

குழந்தைகளே! அழாதீர்கள். நான் என்ன செய்வேன். இப்படி நீங்கள் அடம் பிடிப்பது சிறிதும் நல்லது அல்ல. நேற்றுத்தான் நீங்கள் உண்பதற்கு ஆளுக்கொரு புலி பிடித்துக் கொடுத்தேன். இன்றும் அதேபோல ஆளுக்கொரு புலி வேண்டும் என்கிறீர்களே. இந்தக் காட்டில் புலியை நான் எங்கே தேடுவேன்? எப்படியும் இன்று மாலைக்குள் நீங்கள் சாப்பிட ஆளுக்கொரு புலி தருகிறேன். அதுவரை பொறுமையாக இருங்கள் என்று உரத்த குரலில் புலிக்குக் கேட்கும் வகையில் சொன்னார்.

இதைக் கேட்ட புலி நடுங்கியது. இந்த பெண் ஒரு வேளை இராட்சசியாக இருப்பாளோ, நல்ல வேளை! அருகில் செல்லாமல் இருந்தேன். இந்நேரம் நம்மைப் பிடித்துக் கொன்றிருப்பார். இனி இங்கே இருப்பது நல்லதல்ல. எங்காவது ஓடிவிடுவோம் என்று நினைத்தது அது. ஒரே பாய்ச்சலாக அங்கிருந்து ஓட்டம் பிடித்தது அது.

தன் திட்டம் வெற்றி பெற்றதை எண்ணி மகிழ்ந்தார் அறிவழகி.

பயந்து ஓடும் புலியை வழியில் சந்தித்தது நரி. காட்டுக்கு அரசே! ஏன் இப்படி அஞ்சி ஓடுகிறீர்கள்? உங்களைவிட வலிமை வாய்ந்தது சிங்கம் தான். நம் காட்டில் சிங்கம் ஏதும் இல்லை. என்ன நடந்தது? சொல்லுங்கள். என்று கேட்டது அது.

நரியே! நம் காட்டுக்கு ஒரு அரக்கி வந்துள்ளாள். இரண்டு குழந்தைகள் அவளிடம் உள்ளன. அந்தக்குழந்தைகள் உண்ண நாள்தோறும் ஆளுக்கொரு புலியைத் தருகிறாளாம். இப்படி அவளே சொல்வதை என் காதால் கேட்டேன். அதனால் தான் உயிருக்குப் பயந்து ஓட்டம் பிடித்தேன், என்றது புலி.

இதைக் கேட்ட நரியால் சிரிப்பை அடக்க முடியவில்லை. புலியாரே! கேவலம் ஒரு பெண்ணிற்குப் பயந்தா ஓடுகிறீர்? அவள் உங்களை ஏமாற்றி இருக்கிறாள். எங்காவது மனிதக் குழந்தைகள் புலியைத் தின்னுமா? வாருங்கள். நாம் அங்கே செல்வோம். அவளையும் குழந்தைகளையும் கொன்று தின்போம் என்றது அது.

அந்தக் குழந்தைகளின் கத்தலை நீ கேட்டிருந்தால் இப்படிப் பேசமாட்டாய். அந்த அரக்கியின் குரல் இன்னும் என் காதில் கேட்கிறது. நான் அங்கு வரமாட்டேன் என்று உறுதியுடன் சொன்னது புலி.

அவள் சாதாரண பெண்தான். உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். அதற்காக உங்கள் வாலையும் என் வாலையும் சேர்த்து முடிச்சுப் போடுவோம். பிறகு இருவரும் அங்கே சென்று பார்ப்போம். உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது. நம் இருவர் பசியும் தீர்ந்து விடும் என்றது நரி.

ஒரு பக்கம் பயம், ஒரு பக்கம் பசி. ஆகையால் தயக்கத்துடன் ஒப்புக் கொண்டது புலி.

இருவர் வாலும் சேர்த்து இறுகக் கட்டப்பட்டன. நரி முன்னால் நடந்தது. புலி தயங்கித் தயங்கிப் பின்னால் வந்தது.

மரத்தில் இருந்த அறிவழகி நரியும் புலியும் வருவதைப் பார்த்தாள். இரண்டின் வாலும் ஒன்றாகக் கட்டப்பட்டு இருந்தது அவரின் கண்களுக்குத் தெரிந்தது. என்ன நடந்திருக்கும் என்பதை உணர்ந்தார் அவர்.

மீண்டும் தன் புத்திசாலித்தனத்தை உபயோகித்தார், கோபமான குரலில், நரியே! நான் உன்னிடம் என்ன சொன்னேன்? என் குழந்தைகள் பசியால் அழுகின்றன. ஆளுக்கொரு புலி வேண்டும் என்றேன். இரண்டு புலிகளை இழுத்து வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றாய். இப்பொழுது ஒரே ஒரு புலியுடன் வருகிறாய் எங்களை ஏமாற்றவா நினைக்கிறாய்? புலியுடன் உன்னையும் கொன்று தின்கிறேன், என்று கத்தினார்.

இதைக் கேட்ட புலி நடுங்கியது. இந்த நரிக்குத்தான் எவ்வளவு தந்திரம்? நம்மை ஏமாற்றித் தன் வாலோடு கட்டி இழுத்து வந்திருக்கிறதே. நாம் எப்படிப் பிழைப்பது? ஓட்டம் பிடிப்பது தான் ஒரே வழி என்று நினைத்தது அது.

அவ்வளவுதான். வாலில் கட்டப்பட்டு இருந்த நரியை இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கியது. நரியோ, புலியாரே! அவள் நம்மை ஏமாற்றுவதற்காக இப்படிப் பேசுகிறாள். ஓடாதீர்கள் என்று கத்தியது.

உன் சூழ்ச்சி எனக்குப் புரிந்து விட்டது. என்னைக் கொல்லத் திட்டம் போட்டாய். இனி உன் பேச்சைக் கேட்டு ஏமாற மாட்டேன் என்று வேகமாக ஓடத் தொடங்கியது புலி.

வாலில் கட்டப்பட்டிருந்த நரி பாறை, மரம், முட்செடி போன்றவற்றில் மோதியது. படுகாயம் அடைந்தது அது. புலியோ எதைப் பற்றியும் சிந்திக்காமல் நரியை இழுத்துக் கொண்டு ஓடியது. வழியில் நரியின் வால் அறுந்தது. மயக்கம் அடைந்த நரி அங்கேயே விழுந்தது. புலி அந்த காட்டையே விட்டு எங்கோ ஓடி மறைந்தது.

ஒரு சில மணி நேரத்திற்கு பிறகு வெளியூர் செல்லும் வியாபாரிகள் வண்டிகள் வர, அவர்களிடம் பேசி, நடந்ததைக்கூறிய அறிவழகி தன் குழந்தைகளுடன் பாதுகாப்பாகக் கணவன் இருந்த ஊரை அடைந்தார். தொழிலில் நல்ல நிலையில் இருந்த கணவரோடு இணைந்து, குழந்தைகளோடு மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தினார்.

## பொது அறிவுத் துணுக்குகள்

- பறவைகளிலேயே மிகவும் நீளமான நாக்கு உடையது, மரங்கொத்தி.
- தவளை, தன்னுடைய கண்கள் மூலம் ஒலியைக் கேட்கிறது.
- 'விவசாயிகளின் எதிரி' என்று அழைக்கப்படுவது, எலி. பூனையின் விலங்கியல் பெயர், பெலிஸ்கேடால்.
- பூச்சி இனங்களில் அதிக அறிவு உடையது, எறும்பு.
- நேருவுக்கு 84 பல்கலைக்கழகங்கள் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளன.

## விடுகதைகள்

- இவனும் ஒரு பேப்பர் தான். ஆனால், மதிப்போடு இருப்பான். அது என்ன?

**பணம்**

- இது ஒரு பூ. முதற்பகுதி ஆதவனின் மறுபெயர். பிற்பகுதி தேசத் தந்தையை குறிக்கும். அது என்ன?

**சூரிய காந்தி**

- ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல்படி. அது என்ன?

**மூக்கு**

- மேலிலும் துவாரம், கீழிலும் துவாரம், வலதிலும் துவாரம், இடதிலும் துவாரம், உள்ளிலும் துவாரம் வெளியிலும் துவாரம் இருந்தும் நீரை என்னுள் சேமித்து வைப்பேன், நான் யார்?

**பஞ்சு**

## சிந்தனைத்துளிகள்

- நிசப்தத்தை நாடுபவன் வாழ்வின் உண்மை நிலையை உணர்ந்துள்ளான்.
- வாழ்வின் அறநெறியை தேடுபவன் தன் வாழ்வின் அன்பு நெறியை உணர்ந்திருத்தல் அவசியம்.
- பொறுமையால் பெற்ற வரும் உண்டு வாழ்வை இழந்தவரும் உண்டு.

# பயங்கரவாத தடைச் சட்டத்தின் அவசியம் குறித்து பிரதமர் விளக்கம்

பயங்கரவாத தாக்குதல்களின் மூலம் எம் முன்னால் பாரிய சவால் உள்ளதாகவும் அதனை எதிர்கொள்ளவே புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டுவர முயற்சிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற நாட்டின் பாதுகாப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்கள் குறித்து நான் தொடர்ச்சியாக மக்களுக்கு தெளிவூட்டல்களை வழங்கி வந்துள்ளேன். இதுதொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பாராளுமன்றில் கருத்துரைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நான் ஆற்றிய உரையின்போதும், இதன் பின்னணியில் உள்ள சர்வதேச பயங்கரவாதம் குறித்து விரிவாக கூறியிருந்தேன்.

இன்று நாம் சாதாரண ஒரு கெரில்லாத் தாக்குதலுக்கு முகம்கொடுக்கவில்லை. மாறாக, பாரிய சவாலே இன்று எம் முன்னால் உள்ளது. இதனாலேயே, புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டு வர நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

எனினும், இதனை நடைமுறைப்படுத்த சில தடைகள் ஏற்பட்டன. கடந்த காலங்களில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்கள், அரசியல் சூழ்ச்சியால் இதனை கொண்டுவர எம்மால் முடியாது போய்விட்டது.

தற்போது இதனை சிலர் எதிர்த்து வருகிறார்கள். இது பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தாது என்றும் அவர்களுக்கு சலுகைகளை வழங்கும் என்றும் கூறுகிறார்கள். நான், அவர்களிடம் இந்த சட்டத்தில் அவ்வாறான சரத்து எங்கு உள்ளது என்று கேட்க விரும்புகிறேன்.

இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகளில் இவ்வாறானதொரு சட்டமே இருக்கிறது. இந்த சட்டத்தில் மக்களுக்கோ அரசுக்கோ அச்சுறுத்தல் விடுப்பதுகூட குற்றமாகத் தான் கருதப்படுகிறது. இப்படியிருககும்போது, ஏன் இதனை எதிர்க்க வேண்டும்? இதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர் களும் ஒத்துழைக்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம்" என மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

# பாகிஸ்தான் ஏதிலிகளை வடக்கில் தங்க வைப்பதா?

நீர்கொழும்புப் பகுதியில் தங்கவைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் மற்றும் மியன்மார், சிரியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஏதிலிகளை வடக்கு மாகாணத்தில், வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அறிய முடிகின்றது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன நேற்றைய தினம் வவுனியாவுக்கு வருகை தந்து வெளிநாட்டு ஏதிலிகளைத் தங்க வைப்பதற்கான இடங்களைப் பார்வையிட்டுள்ளதான செய்திகளும் வெளியாகியுள்ளன.

தன்நாட்டு மக்களை ஏதிலிகளாக வெளிநாடுகளுக்குத் துரத்திய ஒரு நாடு வெளிநாட்டு ஏதிலிகளைப் பொறுப்பெடுத்துப் பராமரிப்பதென்பது பெற்ற தாயைப் பராமரிக்காத சிலர் வறுமை ஒழிப்புக்கு உதவுகின்ற கதையாகத்தான் இருக்கும்.

பரவாயில்லை அந்தரித்து அகதி என்று ஓடி வந்தவர்களை வாழ வைப்பது அடிப்படைத் தர்மம் என்ற வகையில் அந்தப் பணியை ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால் கடந்த ஆறு வருடங்களாக நீர்கொழும்புப் பகுதியில் தங்க வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தான் உள்ளிட்ட வெளிநாட்டு ஏதிலிகளை வடக்கு மாகாணத்தில் தங்க வைப்பது பொருத்தமானதா என்ற விடயத்தை பல தடவைகள் சிந்தித்தாக வேண்டும்.

இஸ்லாமிய தீவிரவாதம் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தி நூற்றுக்கணக்கான அப்பாவி பொதுமக்களை கொன்றுவிட,

இலங்கை இராணுவம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தி, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படம் இருந்தது என்பதற்காக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவரைக் கைது செய்தது என்றால், வடபுலத்தின் மீதான பாதுகாப்புப் படையினரின் எண்ணப்பாடு என்னவாக இருக்கிறதென்பது புரிதற்குரியது.

நிலைமை இதுவாக இருக்கையில், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் ஏதிலிகளை வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் தங்கவைப்பதென எடுக்கப்படுகின்ற தீர்மானம் எதற்கானது என்பதுதான் புரியாமல் உள்ளது.

வெளிநாட்டு ஏதிலிகளை நீர்கொழும்பில் தங்கவைப்பது பாதுகாப்பு இல்லை என்றால்,

வவுனியாவையும் யாழ்ப்பாணத்தையும் தவிர, தென்பகுதியில் பாதுகாப்பான இடங்கள் இல்லையா என்ற கேள்வியும் எழவே செய்யும்.

எனவே பாகிஸ்தான் ஏதிலிகளை வடக்கில் தங்கவைப்பதற்குள் ஏதேனும் வில்லங்க நோக்கம் இருக்குமா? என்பதை ஆழ்ந்து சிந்திப்பது வருமுன்னர்க்காக்கும் செயலாகும்.

தவிர, பாகிஸ்தான் ஏதிலிகளை யாழ்ப்பாணத்தில் தங்கவைக்க அங்கிலிக்கன் திருச்சபை முடிவு செய்துள்ளதான தகவல்களும் உண்டு.

அவ்வாறு முடிவு செய்யப்பட்டிருந்தால் அது மிகப்பெரும் தவறான முடிவாகும்.

ஏதிலிகளைப் பராமரிக்கின்ற பொறுப்பை அங்கிலிக்கன் திருச்சபை மனிதாபிமான அடிப்படையில் செய்யலாம்.

ஆனால் ஏதிலிகளை யாழ்ப்பாணத்தில் தங்கவைப்பது என்ற முடிவை அவர்கள் தன்னிச்சையாக எடுக்க முடியாது.

அவ்வாறு எடுத்து ஏதேனும் விபரீதங்கள் நடந்தால், அதற்கான முழுப்பொறுப்பையும் அங்கிலிக்கன் திருச்சபை ஏற்றாக வேண்டும்.

என்னைச் சந்திப்பவர்கள்
வெற்றியடையாமல் போவதில்லை.
– இப்படிக்கு தோல்வி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மட்டக்களப்பு சியோன் தேவாலயத்துக்கு ஜனாதிபதி மைத்திரி கண்காணிப்பு விஜயம்

(மட்டக்களப்பு)

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலினால் சேதமடைந்த மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தை பார்வையிடுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பிற்பகல் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

தேவாலயத்திற்கு சென்ற ஜனாதிபதி, பிரதம திருத்தந்தையான ரொஷான் மகேஷன் உள்ளிட்ட திருத்தந்தைகளால் வரவேற்கப்பட்டார்.

கொடிய பயங்கரவாத தாக்குதலினால் சேதமடைந்த தேவாலயத்தை நேரில் பார்வையிட்ட ஜனாதிபதி, தேவாலயத்தின் அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுததுமாறு கிழக்கு மாகாண கட்டளை தளபதி உள்ளிட்ட பாதுகாப்புத்துறையினருக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த துன்பியல் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட தேவாலயத்தின் பிரதம திருத்தந்தை உள்ளிட்ட திருத்தந்தைகளுக்கும் பிரதேசத்தின் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் ஜனாதிபதி தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தார்.

அமைச்சர் தயா கமகே, கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் பாதுகாப்புத்துறை தலைமை அதிகாரிகளும் இவ்விஜயத்தில் இணைந்து கொண்டனர். (ம-3)

# தற்காலிக சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க முடியாது

## யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிகச் சுகாதாரத் தொண்டர்களாக நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வேலையும் செய்யும் சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க முடியாதென யாழ் மாநகர சுகாதாரப்பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ் மாநகர சபை அமர்வில் உறுப்பினர்கள் சிலரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு சுகாதார வைத்திய அதிகாரி இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதாரத் தொழிலாளர்களுக்கான வெற்றிடம் தற்போது இல்லையெனவும் கடந்த காலங்களில் அரசசார்பற்ற நிறுவனங்களின் கொடுப்பனவுடன் இவர்கள் தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரத் தொழிலாளர்களாக ஈடுபட்டதுடன் தற்போது சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களின் நம்பிக்கை தமக்கு நிரந்தர நியமனம் கிடைத்துவிடும் என்று. ஆனால் சுகாதாரப் பிரிவில் அவ்வாறான வெற்றிடங்களை நிரப்பக்கூடிய ஆளணி தேவை ஏற்படவில்லை எனத் தெரிவித்தார்.(ம-3.10)

# 14 வர்த்தகர்களுக்கு ரூ 48 ஆயிரம் தண்டம்

## சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய 14 வர்த்தகர்களுக்கு எதிராக நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் 48 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கும் வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போது பாவனையாளர் சட்டங்களை மீறிய வர்த்தகர்களே இவ்வாறு நீதிமன்று முன் நிறுத்தப்பட்டனர்.

இவர்களில் 4 வர்த்தகர்களுக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் வீதம் 6 ஆயிரம் ரூபாயும் 5 வர்த்தகர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் வீதம் 9 ஆயிரம் ரூபாயும் 2 வர்த்தகர்களுக்கு 4 ஆயிரத்து ஐநூறு ரூபாய் வீதம் 9 ஆயிரம் ரூபாயும் 3 வர்த்தகர்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் வீதம் 9 ஆயிரம் ரூபாயும் நீதிமன்றினால் அறவிடப்பட்டது. (ம-10,114)

# மக்கள் பிரதிநிதிகளின் வகிபாகமும் பொறுப்புக்களும்

## ஆழமான கலந்துரையாடல் இன்று

(யாழ்ப்பாணம்)

மக்கள் பிரதிநிதிகளின் வகிபாகமும் பொறுப்புக்களும் எனும் தலைப்பிலான ஓர் ஆழமான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் சாவகச்சேரி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் நடத்தப்படும் இக் கலந்துரையாடலில் சாவகச்சேரி பிரதேச சபையையும் சாவகச்சேரி நகர சபையையும் பிரதிநிதிப்படுத்தும் பிரதிநிதிகளுக்கான வகிபாகமும் பொறுப்புக்களும் எனும் தலைப்பில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும்.

சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் நகரசபை மக்கள் பிரதிநிதிகளை இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5-114)

# சத்திய தரிசனம்

## மனதை அடக்க நல்லவழி



❖ ஒவ்வொரு நாளும், ஒரு வாழ்நாள் கடக்கிறது என்ற உணர்வு உண்டாக வேண்டும். அவற்றைப் பயனுள்ளதாக்கி கொள்ள வேண்டும் என்ற வைராக்கியம் வேண்டும்.

❖ மனதின் இயல்பே அமைதியற்று இருப்பது தான். எலி ஓரிடத்தில் நிற்காமல் இங்குமங்கும் தாவி ஓடுவது போல, மனமும் இங்கும் அங்கும் தாவித் திரியும் இயல்பு கொண்டது.

❖ மனதைக் கட்டுப்படுத்த விரும்பினால், அதனைக் கட்டிப்போடுவது ஒன்று தான் வழி. கடவுள் மீது பக்தி செலுத்துவது, நல்ல நூல்களைப் படிப்பது, நல்லவர்களோடு பழகுவது போன்ற விஷயங்களில் ஈடுபட்டு வந்தால், மனம் நாளடைவில் அடங்கும்.

❖ செய்யும் பணியில் மனதை ஆர்வத்துடன் ஈடுபடுத்தினால் சலனம் குறைந்துவிடும். சின்ன விஷயமாக இருந்தாலும் வழிபாட்டுக்காக மலர்களைப் பறித்து மாலை தொடுப்பது, சந்தனம் அரைத்துக் கொடுப்பது, பூஜைப் பொருட்களைச் சேகரிப்பது போன்ற பணிகளைப் பக்தியுடன் செய்து வந்தால் மன அடக்கம் கைகூடும்.

# அரையிறுதிக்குள் நுழைந்தது திருக்குமரன் அணி



தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம், வடமாகாண ரீதியில் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தியது.

வடமாகாணம் முழுவதுமாக, மொத்தமாக 46 அணிகள் பங்கு பற்றிய இந்தச் சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதியாட்டம் கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இதில் உரும்பிராய திருக்குமரன் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதியது. போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன.

வெற்றியாளரைத் தீர்மானிக்க நடைபெற்ற சமநிலை தவிர்ப்பு உதையில், திருக்குமரன் அணி, 04:03 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. போட்டியின் நாயகனாக திருக்குமரன் அணி சார்பாக இரண்டு கோல்களைப் பதிவு செய்த திலீபன் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து இளவாலையங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது. (க-26)

## வடக்கின் இரு வீரர்கள் தேசிய குழாமில்

2022 ஆம் ஆண்டு கட்டாரில் நடைபெறவுள்ள பீபா உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் தகுதிகாண் போட்டியில் விளையாடவுள்ள 31 பேர் கொண்ட வீரர்கள் குழாமை இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் வெளியிட்டுள்ளது.

இதில் வடக்கைச் சேர்ந்த வீரர்களான செபமாலை நாயகம் யூட் சுபன், சந்தியா மரியதாஸ் நிதர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குழாமே எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு நடைபெறும் ஏ.எப்.சி. ஆசிய கிண்ண தொடரிலும் பங்குபற்றவுள்ளது. (க-26)

# ஆண்களுக்கான கபடிப் போட்டி கரவெட்டி பிரதேச செயலக அணி சம்பியன்



யாழ்.மாவட்ட பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கிடையிலான கபடித் தொடரில் கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இதன் இறுதியாட்டம் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக இளைஞர் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதிவரை இரு அணிகளும் சம பலத்துடன் மோதின. இருப்பினும் ஆட்ட நேர முடிவில் கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் அணி 26:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)

# பிரசாந் அபார ஆட்டம் சைனிங் அணி வெற்றி



வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான 7 நபர் கொண்ட உதைபந்தாட்டத் தொடர் ஆரம்பமானது. சைனிங்ஸ் அணி உதயசூரியன் அணியுடன் மோதியது. இப்போட்டியில் சைனிங்ஸ் அணி பிரசாந்தின் கோல் மழை மூலம் 9:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தொடரின் முதல் வெற்றியை பதிவு செய்தது.

சைனிங் அணியின் நட்சத்திர வீரர் பிரசாந் 7 கோல்களையும் தீபன் செந்தூரன் ஆகியோர் தலா ஒரு கோலையும் போட்டார். (க)

# அரியாலை அருணோதய ச.ச. நிலையத்தின் மாபெரும் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி

அரியாலை அருணோதய சனசமூக நிலையத்தின் 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர்களான கந்தையா கனகரத்தினம், கந்தையா புஸ்பராசா (அறிவாளி) ஞாபகார்த்தமாக சிறிதரன் வசந்தகுமாரி ஆதரவில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கான துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி மற்றும் 19 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு சரஸ் வதி சனசமூக நிலைய புதிய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க)

# பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடர் தெல்லிப்பழை இளைஞர் அணி சம்பியன்




யாழ்.மாவட்ட இளைஞர் அணிகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இதன் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை இளைஞர் அணியை எதிர்த்து உடுவில் இளைஞர் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப் பழை இளைஞர் அணி 27:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)

# இறுதியாட்டத்தில் றெயின்போ




இளங்கதிர் அணியுடனான அரையிறுதி ஆட்டத்தில் றெயின்போ அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் வல்லைவக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரில் றெயின்போ அணி அரையிறுதி ஆட்டத்தில் இளங்கதிர் அணியுடன் மோதியது. இப்போட்டியில் றெயின்போ 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (க)

# தான்தோன்றித்தனமான செயற்பாட்டுக்கு நாம் பொறுப்பு கூற மாட்டோம்

## புத்தசாசன அமைச்சு அறிவிப்பு



(கொழும்பு)

விகாரைகள் தவிர்ந்த பிற இடங்களில் தான்தோன்றித்தனமாக வெசாக் தோரணைகளை அமைப்பதனாலும், தான சாலைகளை நடத்துவதனாலும் ஏற்படும் விளைவுகளுக்கு பொறுப்பு கூறப் போவதில்லை என புத்தசாசன அமைச்சு அறிவித்துள்ளது.

பௌத்த விவகார அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர், விகாரைகள் தவிர்ந்த பிற இடங்களில்தான்தோன்றித்தனமாக வெசாக் தோரணைகளை அமைப்பதனாலும், தான சாலைகளை நடத்துவதனாலும் ஏற்படும் விளைவுகளுக்கு எமது அமைச்சு பொறுப்பு கூறாது.

மகாநாயக்க தேரர்களின் அறிக்கைக்கு அமையவே நாம் செயற்பட்டு வருகிறோம். அதன்படி, விகாரைக்குள் மாத்திரமே தானசாலைகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், பிற இடங்களில் தானசாலைகளை நடத்துவதற்கு தடை விதிப்பதற்கு அமைச்சர் என்ற ரீதியில் எனக்கு அங்கீகாரம் இல்லை. வேண்டுமாயின் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்துடன் கலந்துரையாடி இது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, எதிர்வரும் 18, 19 தினங்களில் பௌத்த மக்கள் அனைவரது இல்லங்களிலும் பௌத்த கொடிகளை பறக்க விடுமாறும் கேட்டுக் கொள்கிறேன். வீதிகளிலும் பௌத்த கொடிகள் சோடனைகள் முன்னெடுக்கப்படும்.

இதன்மூலம் நாம் பயங்கரவாதத்திற்கு அஞ்சாதவர்கள் என்பதை உலகத்திற்கு எடுத்துக் காட்டுவோம். ஆனால், மக்களை ஒன்றிணைக்கும் வகையிலான வெசாக் தோரணைகள் அமைப்பது தடை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ம-3)

# கிளிநொச்சிப் பகுதியில் கட்சி செயற்பாட்டாளர் வீட்டில் படையினர் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட செயற்பாட்டாளர் வீட்டில் நேற்று படையினர் இரண்டரைமணி நேரம் கடுமையான சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். கிளிநொச்சி பரந்தன் உமையாள் புரத்திலுள்ள வீட்டிலேயே மேற்படி சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சோதனையின் போது மூன்று புத்தகங்களை சந்தேகத்தின் பேரில் படையினர் எடுத்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,10)

# இன்று அதிக வெப்பம் நிலவும்; பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணம் மற்றும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் அநேகமான பிரதேசங்களில் இன்று அதிக வெப்பமான கால நிலை நிலவக்கூடும் என வானிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக அவதானத்துடன் செயற்படுமாறு அந்த நிலையம் பொதுமக்களை கோரியுள்ளது.

இந்த வெப்பமான காலநிலை காரணமாக உடல் வறட்சி, உடல் சோர்வு, தோலில் எரிச்சல் மற்றும் மயக்கம் ஏற்படக்கூடும் என அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக அதிகளவில் நீர் அருந்துமாறும், நிழலான இடங்களில் ஓய்வெடுக்குமாறும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ள தாக வானிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை பூச்சாண்டியாக காட்ட கூடாது

## சபையில் பிரதமர் ரணில்

(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக பூச்சாண்டியை உருவகித்து காட்ட எந்த தேவையும் இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இதனை கூறியுள்ளார்.

குறுகிய அரசியல் பேதங்களையும் கருத்து முரண்பாடுகளையும் புறந்தள்ளி விட்டு, நாட்டின் சட்டத்தை மேலும் வலுப்படுத்தி, அனைவரும் இணைந்து ஒன்றாக பயங்கரவாதத்தை எதிர்கொள்ள வேண்டும்.

பயங்கரவாதத்தை தோற்கடிக்க இணைந்து செயற்படுமாறு முழு



இலங்கை வாழ் மக்களின் பிரதிநிதிகளான 225 பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற துரிதமாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை பொது இணக்கப்பாட்டின் கீழ் நிறைவேற்ற உதவுமாறு அனைவரிடமும் கோரிக்கை விடுக்கின்றேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## மீண்டும் குண்டு...

குண்டு வெடிக்கும் அச்சம் உள்ளதாக தகவல் கிடைத்திருப்பதாக பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா பாராளுமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

அத்துடன் பயங்கரவாதிகளில் 150 பேரில் 50 பேர்வரை கைது செய்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். அப்படியாயின் இன்னும் 100 பயங்கரவாதிகள் இருக்கின்றனர். இது மிகவும் எச்சரிக்கையான நிலையாகும். உளவுத்துறை பலவீனமடைந்ததால்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சிலர் விமர்சித்து வந்தனர்.

உளவுத்துறையில் சிலர் நீக்கப்படுவதன் மூலம் உளவுத்துறை பலவீனமடையவில்லை. மாறாக உளவுத்துறையை தொழிநுட்ப ரீதியில் பலப்படுத்தவில்லை.

மேலும் இந்த சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு பொலிஸ்மா அதிபர் மற்றும் பாதுகாப்பு செயலாளர் பதவி விலகியமையை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் பாதுகாப்பு செயலாளர் எனக்கு நன்கு தெரிந்தவர். பாதுகாப்பு செயலாளர் என்றவகையில் தாக்குதல் தொடர்பாக தகவல் கிடைத்ததை நான் ஜனாதிபதிக்கு தெரிவிக்காமல் இருப்பேனா என்று அவர் என்னிடம் தெரிவித்தார். அதேபோன்று தாக்குதல் எச்சரிக்கை இருப்பது தொடர்பாக பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்கள் 15 தடவைக்கும் மேல் ஜனாதிபதிக்கு தெரிவித்ததாகவும் அப்போதெல்லாம் ஜனாதிபதி கண்டுகொள்ளாமல் இருந்ததாகவும் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழே நான் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்தேன். அந்த சட்டத்தில் குறைகள் இருக்கின்றமையாலே அந்த சட்டத்துக்கு கீழ் என்னை கைதுசெய்து சிறையில் அடைக்க முடியுமாகியது. அதனால் தற்போதுள்ள நிலையில் அரசியல் லாபம் நோக்கில் செயற்படாமல் நாடுதொடர்பாக அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமே இந்த பிரச்சினையில் இருந்து மீள முடியும் என்றார். (ம-3)

## சிவாஜிலிங்கத்துக்கு எதிராக..

டித்துறை நகரசபைத் தலைவர் கோ.கருணானந்தராசா மற்றும் நகரசபை உறுப்பினர் பொ.சிவஞானசுந்தரம் ஆகியோருக்கும் அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பாணையின் பிரகாரம் இம்மாதம் 31ஆம் திகதி சிவாஜிலிங்கம் உட்பட்ட மூவரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளில் வல்வெட்டித்துறை தீருவிலில் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடுவதற்கு சிவாஜிலிங்கம் முயற்சித்திருந்தார். எனினும் அப்போது பொலிஸார் அதனை தடுத்திருந்ததுடன், வழக்குப் பதிவு செய்வோம் எனவும் எச்சரித்திருந்தனர்.

இச்சம்பவம் இடம்பெற்று 4 மாதங்கள் கடந்திருக்கும் நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடைய ஒளிப்படம், பதாகைகள் மற்றும் பிறந்தநாள் கொண்டாடுவதற்கான கேக் ஆகியன வைத்திருந்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிவாஜிலிங்கத்திற்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (ம-3)

## புதிய பயங்கரவாத தடைச்...

காட்சிப்படுத்தக்கூட முடியாத சரத்துக்கள் உள்ளன. அத்துடன், இது பாரிய மனித உரிமை மீறலாகும். இந்த சட்டத்தில் மனித உரிமைக்கு எதிரான சரத்துக்கள் உள்ளது என்பதை நாம் அறிவோம்.

2017 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச பயங்கரவாதம் இலங்கையில் இருப்பதை அரசாங்கம் அறிந்திருந்தது என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார். அப்படியென்றால், ஏன் இதற்கெதிராக நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை? இது குறித்து கேட்டமைக்கு இதனைக் கட்டுப்படுத்த சட்டமில்லை என்று கூறினீர்கள்.

ஆனால், அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நபர்களை கட்டுப்படுத்த மட்டும் சட்டங்களை பாராது கட்டுப்படுத்தினீர்கள். இது பாரதூரமான குற்றமாகும்.

துருக்கி வழியாக சிரியா சென்ற தீவிரவாதி குறித்து அரசாங்கம் அறிந்துக்கொண்டிருந்தது. இந்த தீவிரவாதிதான் தெஹிவளையில் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர். அரசாங்கம் நினைத்திருந்தால் இந்த தாக்குதலை தடுத்து நிறுத்தியிருக்கலாம். ஆனால், அரசாங்கம் மௌனமாகவே இருந்தது என்று அவர் குற்றஞ்சாட்டினார். (ம-3)

## முல்லையில் விபத்து இளைஞன் படுகாயம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இராணுவ வாகனத்துடன் மோதுண்டதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது. இராணுவம் பயணித்த டிப்பர் வகை ஊர்தியும் துவிச்சக்கரவண்டியில் பயணித்த இளைஞனும் மோதுண்டதிலே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியினை சேர்ந்த 26 அகவையுடைய சுந்தரலிங்கம் கனிஸ்ரன் என்ற இளைஞன் படுகாயமடைந்து புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ம-3,281)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08-05-2019
சீட்டிழுப்பு இலக்கம் 1338
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
T 1 2 3 3 1 7
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.05.08
சீட்டிழுப்பு இலக்கம் 2113
P 04 34 38 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 08/05/2019
சீட்டிழுப்பு இலக்கம் 377
E 13 41 55 56 74

## ஹெரோயின் கட...

பட்டித்தெரு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவருக்கே இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

402 கிராம் 250 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயினை தம்வசம் வைத்திருந்தமை மற்றும் கடத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் பேரில் 2015 ஆம் ஆண்டு பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவினரால், சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் 34 கிராம் 75 மில்லிகிராம் ஹெரோயினை தம்வசம் வைத்திருந்தமை நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் மரணதண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## ஆயுத களஞ்சிய...

நிலிருந்து 700 கிலோ கிராம் வெடி மருந்துகள் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் பயங்கரவாத அமைப்பான தேசிய தௌஹீத் அமைப்புக்கு சொந்தமான இறுவட்டுக்களும் மீட்கப்பட்டுள்ளன.

கேகாலை இராணுவ முகாமிற்கு கிடைத்த தகவலுக்கு அமைய ஆயுத களஞ்சியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புக்கு சொந்தமான ஆயுதங்கள் மற்றும் உடமைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கிணற்றில் விழுந்...

விழுந்து மரணத்தை தழுவிக் கொண்ட சம்பவம் ஒன்று மன்னாரில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் மன்னார் பெரியகமம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது. பேசாலையைச் சேர்ந்த றொசான் பர்ணாந்து குடும்பத்தார் மன்னாரிலுள்ள பெரியகமம் பகுதியிலுள்ள தங்கள் உறவினர் வீட்டுக்குச் சென்று அங்கு ஒருசில தினங்கள் தங்கியிருந்துள்ளனர்.

இவ்வேளையில் கடந்த செவ்வாய் கிழமை பிற்பகல் றொசான் பர்ணாந்து என்பவரின் இரட்டைப் பிள்ளைகள் பக்கத்து வீடாகிய தங்கள் மாமியாரின் வீட்டு வளவுக்குள் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் இரண்டு பிள்ளைகளில் ஒருவரைக் காணாது அவ்பிள்ளையின் பெற்றோர் உட்பட உறவினர்கள் தேடியபோது றொசான்சஞ்சேய் பர்ணாந்து (வயது2) என்ற இரட்டையர்களில் ஒரு சிறுவன் கிணற்றுக்குள் இருந்து உயிரற்ற நிலையில் சம்பவம் அன்றே மீட்டுள்ளனர்.

வளவுக்குள் இருந்த கிணறு மிகவும் பதிவானதாக இருந்தமையாலே இச்சிறுவன் தவறி விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் சிறுவனின் மரண விசாரணையை மன்னார் மாவட்ட நீதவான் ரி.சரவணராஜா மேற்கொண்டதுடன் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து சிறுவனின் சடலம் பேசாலை சேமக்காலையில் நேற்று புதன்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது. (ம-285)

## அனைத்து பள்ளி...

நபர்களோ கைது செய்யப்படவில்லை.

இராணுவத்தினர், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் இணைந்து, நேற்று காலை 10 மணியில் இருந்து ஒரு மணி வரை பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் பள்ளிவாசல்களில் பரபரப்பான சூழல் காணப்பட்டது. இந்த தேடுதலின் போது, 14 பள்ளிவாசல்கள் பாதுகாப்பு தரப்பினரால் சோதனையிடப்பட்டுள்ளன. (ம-3)

## வடக்கு பாடசா...

ஆரம்பிக்கப்பட்ட நிலையில் கடந்த நாட்களை விட நேற்றைய தினம் மாணவர் வரவு அதிகரித்ததாகத் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து சகல பாடசாலைகளின் பாதுகாப்புத் தொடர்பில் மத்திய கல்வி அமைச்சு அதிக அக்கறை காட்டி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-3-10)

## விரைவில் விடுவி...

பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் முன்வைத்த நிலையில் அதற்கு பதில் தெரிவிக்கையில் பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண கூட்டுறவு பயிற்சி நிலையம் புனர்வாழ்வு நிலையமாக செயற்பட்டு வருகின்றது என்பது தெரியும். இது முன்னாள் போராளிகளை புனர்வாழ்வு வழங்க பயன்படுத்தப்பட்டது. இப்போது ஒருவர் உள்ளார் என்றாலும் எதிர்காலத்தில் விடுவிக்கப்படும் நபர்களுக்கு புனர்வாழ்வு வழங்க இந்த நிலையம் அவசியம்.

அத்துடன் விரைவில் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு நிலைமைகள் வழமைக்கு திரும்பும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ம-3)

## கொடிய பயங்கர...

அரச அதிகாரிகள் மற்றும் மாகாணத்தின் முஸ்லிம் இளைஞர் யுவதிகளை சந்தித்த போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் இலங்கையின் பிரச்சினை மட்டுமல்ல. அது சர்வதேசத்துடன் தொடர்புடைய பயங்கரவாதச் செயலாகுமென ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். இந்த சர்வதேச பயங்கரவாத குழுவுக்கு எதிராக செயற்பட உலகின் பலம் வாய்ந்த நாடுகள் முன்வந்திருக்கும் நிலையில் அதனுடன் சம்பந்தப்பட்டவர்களை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிக்கும் நடவடிக்கைகளை எமது பாதுகாப்பு தரப்பினர் தற்போது மிக வெற்றிகரமான முறையில் முன்னெடுத்திருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் நாட்டின் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் பாதிக்கப்படும் வகையிலான நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டு பயங்கரவாதத்திற்கு எந்த வகையிலும் துணைபோக வேண்டாம் என அனைவரிடமும் கேட்டுக் கொண்ட ஜனாதிபதி, நாட்டில் தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் பலப்படுத்துவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி குண்டு வெடிப்பு இடம்பெற்ற கல்முனை சாய்ந்தமருது பிரதேசத்திற்கு நேற்று முற்பகல் சென்ற ஜனாதிபதி, சாய்ந்தமருது வீ மெரிடியன் மண்டபத்தில் கிழக்கு மாகாண அரச அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், பாதுகாப்புத்துறை முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட இச்சந்திப்பில் பாதுகாப்புத்துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தெளிவான மறுசீரமைப்பு நிகழ்ச்சி திட்டத்துடன், நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்த நடவடிக்கைகள் தற்போது திட்டமிட்ட வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், அந்த நிகழ்ச்சித்திட்டதின் ஊடாக அனைத்து பிரஜைகளும் அச்சமும், சந்தேகமுமின்றி சுதந்திரமான சமூகத்தில் வாழும் உரிமை உறுதிப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்புத் தரப்பினர் வெற்றிகரமாக முன்னெடுத்துவரும் நிலையில் இந்த சம்பவங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவந்து மக்கள் மத்தியில் அச்சத்தையும், சந்தேகத்தையும் போக்கி நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு அரச அதிகாரிகள் முன்வர வேண்டுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்களைத் தொடர்ந்து உயிரைப் பணயம் வைத்து தாய் நாட்டுக்காக தமது பொறுப்புக்களை நிறைவேற்றி வரும் பாதுகாப்புத்துறையினருக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்ததுடன், முஸ்லிம் சமூகத்துடன் நெருங்கி செயற்பட்டு எவ்வித குற்றச்சாட்டும் முன்வைக்கப்படாத வகையில் பாதுகாப்பு தரப்பினர் மேற்கொண்டு வரும் மனிதாபிமான நடவடிக்கைகளைப் பாராட்டினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, கொடிய பயங்கரவாதத்திற்கு இலங்கையில் இடமளிக்கப்படமாட்டாதென்றும் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதைப் போன்றே எந்தவொரு இனப்பிரிவினருக்கும் அசௌகரியம் ஏற்படாத வகையில் அரச தலைவர் என்ற வகையில் தான் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

அடிப்படைவாத பயங்கரவாதத்திற்கு இடமளிக்காமல் அதை எதிர்த்து, தாய் நாட்டுக்காக கடமைகளை ஆற்றுமாறு அங்கு கூடியிருந்த இளைஞர், யுவதிகளிடம் தெரிவித்த ஜனாதிபதி, முஸ்லிம் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை இஸ்லாமிய மதத் தலைவர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

ஹிஸ்புல்லாவின் தலைமையில் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிலையம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, கல்வி அமைச்சினதும் உயர்கல்வி அமைச்சினதும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக தனியார் பல்கலைக்கழகமாக அதனை முன்னெடுத்து செல்வதற்கு எதிர்பார்ப்பதாகவும், இதன்போது அக்கல்வி நிறுவனத்தில் முன்னெடுக்கப்படும் பாடநெறிகள் தொடர்பாக தெளிவான தீர்வுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சாய்ந்தமருது பிரதேசத்திற்கு தனியானதொரு பிரதேச சபையை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, அவ்விடயத்துடன் சம்பந்தப்பட்ட சகல பிரிவினருடனும் கலந்துரையாடுவதாக தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் பின்னர் கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி சாய்ந்தமருது பிரதேசத்தில் குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தையும் ஜனாதிபதி பார்வையிட்டார். (ம-3)

## ஆவணங்கள்...

நீதிமன்ற உத்தரவிற்கு அமைவாக தோண்டும் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் முக்கிய ஆவணங்கள் இருப்பதாக தெரிவித்து நீதிமன்றின் அனுமதி பெறப்பட்டு இந்த அகழ்வு நடவடிக்கை நேற்று காலை இடம்பெற்றது

இதன்போது நீதிமன்ற பதிவாளர் மற்றும் பொலிஸார், படையினர், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலகர் ஆகியோர் முன்னிலையில் குறித்த காணிப்பகுதியில் தோண்டப்பட்ட போதும் எதுவித பொருட்களும் அங்கிருந்து மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-281)


காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

Wanted female Staffs

who is not engaged in part time jobs or studies
1.Admin staff
2.Account clerk

(C-6325) 076 138 0212

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

V2 TRAVELS

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (8715)



BRITISH COLLEGE OF HIGHER STUDIES



Join our next batch of students exclusively for
IELTS & IELTS life skills crash programme (A1,B1)
for students or spouse who wish to proceed to
Australia, U.K, Canada, USA & New Zealand.
Course duration – 2 months (T & C Applied) Highly experienced lecture panel
Week day & weekend batches Individual attention
100 % success level assured
Call: 076 138 0212 / 021 222 4550
(C-6325)

வாகன கண்காணிப்பு கருவி



உங்களின் வாகனத்தின் நடமாட்டத்தை தொலை பேசி மூலம் அவதானிக்கலாம். Milage, Over Speed, Parking, Engine Report உண்டு அத்துடன் Distributorகளுக்கு விசேட சலுகைகள், Package உண்டு.

Garudan PVT LTD (8713) 077 444 5909


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.